# வாழ்விக்க வந்த என் தெய்வம்

எஸ்.பார்த்தசாரதி

நேசமுடன்

# உள்ளே

1. அன்பு நிறைந்தது அருள் புகுந்தது
2. இருமை கடந்த இறைமை
3. அப்பா அறிவார்
4. துன்பநிலை மாறியது
5. மரணம்
6. மரண ஆறுதல்
7. வாக்கை காப்பாற்ற வேண்டும்
8. தந்தை பொறுத்துக் கொள்ளமாட்டார்
9. தகுந்த ரூபம் எடுத்து தந்தை உதவுவார்#
10. பரப்பிரம்மம்
11. தந்தையின் விருப்பம்
12. ஆரம்பப் பாடம்
13. தலைவர்களே தவறு செய்கிறார்கள்
14. தந்தையின் வீடு
15. தீராத விளையாட்டுப் பிள்ளை
16. கண்ணாடியில் சுவாமியின் முகம்

17. நாம ரசம்

18. எனது யோகி ராம்சுரத்குமார்

19. அம்மா வேண்டாம், அம்மா சொத்து வேணும்

20. தந்தையின் பணியைத்தான் செய்கிறோம்

21. உண்மை அறிவோம்

22. உடலைப் பேணும் உணவு

23. குருவின் கடாட்சம்

24. அடியாரை கரைசேர்க்கும் சுவாமியின் கோபம்

25. சுவாமியின் பார்வையில் அன்பர்கள்

26. பக்த சிரேஷ்டர்கள்

27. பெருமை, அது சுவாமியின் அண்மை தந்தது

28. சுவாமி அனைவருக்குமானவர்

29. வெண்பொங்கல்

30. சுவாமியின் சிலையும் சமாதியும்


31. மானவ தர்மம்

32. தந்தையின் பிள்ளைஷ்

33. வாழ்வின் நோக்கம்

34. ஆன்மிகம் மாவீரர்களுக்கே

35. சுவாமி நிறைந்து இருக்கிறார்



# அன்பு நிறைந்தது அருள் புகுந்தது

# 01

1976ஆம் ஆண்டு. ஆகஸ்ட் மாதம் 30ஆம் நாள். சுவாமி யோகி ராம்சுரத்குமாரை முதன்முதலில், மாலை ஆறு மணி அளவில் தேரடி மண்டஷ்பத்தில் தரிசனம் செய்த நாள்.

ஞானியரைப் பற்றி எதுவுமே அறியாத பாமரனாகிய என்னிடம் சமமாக அமர்ந்து பேசிய அந்த மஹாப்பிரபுவை இன்றும் நினைத்துக் கைகூப்பித் தொழுகிறேன்.



வஞ்சக மனத்துடனும், பொய்யான பணிவுடனும் சுவாமியைப் பணிந்த என்னை அந்த மூத்த முதற்பொருள் தன் கரங்களுக்குள் அடக்கி அரவணைத்து மெய்ப்பொருளை அறிமுகப்படுத்த எத்தனித்த நாள் அன்று.

யாரோ உமிழ்ந்து துப்பிய இரண்டு வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு உலகையே உள்ளங்கையில் சுமந்திருப்பதைப் போல் சுவாமியிடம் மமதை காட்டிய நாள் அன்று.

என் மமதைக்கு தன் அன்பையும், அருளையும் பரிசளித்த எம்பெருமான் எனை ஆட்கொண்ட தினம் அன்று.

தர்மத்திற்கு புறம்பான ஆசைகளின் அவலத்தால் மதி கெட்டு, நிதி இழந்து, கடன் பெருகி, மறுநாள் விடிந்துவிடுமே எனப் பயந்து தூங்காது துவண்ட நாளிலும் வெட்கமற்று வெட்டிப் பேச்சுப் பேசித் திரிந்த காலமது. சுவாமியை அடைந்த நேரமது. நாட்கள் கடந்தன. சுவாமியின் சொரூபம் மங்கலாகச் சற்றே தெரிய ஆரம்பித்தது.

*சுவாமி பல ஞானிகளைப் பரிச்சயப் படுத்தினார். அவர்களின் உபதேசங்களை என்னுள் விதைத்தார். தன் நாமத்தை உரமாக இட்டார். விதைத்த பொருள் முளைவிட்டது. சுவாமி மௌனித்தார். என்னுடன் பேசுவதைத் தவிர்த்தார். தன் எதிரிலே நாட்கணக்கில், வாரக்கணக்கில் அமர்த்தினார். முளைவிட்ட செடி வளர்ந்தது.*

*அவரின் திருச்சபையில் பல காட்சிகள் என் முன்னே அரங்கேறின. அத்தனைக்கும் என்னை சாட்சியாக்கினார்.*

*மூன்று வருடங்கள் கழிந்தன. என் மமதை சற்றே விலகியது. சுவாமியின் சொரூபம் பளிச்சென்று புலப்பட்டது. அந்த பேரழகில் மயங்கினேன். அதர்ம எண்ணங்கள் என்னைவிட்டு ஓட்டம் பிடித்தன. அங்கே அன்பு நிறைந்தது. அருள் புகுந்தது. சுவாமி மீண்டும் என்னிடம் பேசினார். அஷ்டலட்சுமிகளும் என்னைச் சீராட்டினர்.*

*சுவாமி என்னை அருகழைத்து அமர்த்திக் கொண்டார். அகிலமே என்னருகில் அமர்ந்துகொண்டது. மரணிக்கப் பிறந்த*

*என்னை வாழ்வித்த என் தெய்வம் என்னை அரவணைத்துக் கொண்டது.*

*சுவாமியின் மூன்று வருட மௌனம் தந்த ஞானம் கனலென உள்ளே சுடர்ந்து ஒளி வீசுகிறது.*



# இருமை கடந்த இறைமை

# 02

லௌகீக வாழ்வின் சௌகரியங்களை வேண்டுவோர், தங்களின் பிரார்த்தனையில் தீவிரம் காட்டும்போது, சுவாமி யோகி ராம்சுரத்குமார், அந்தப் பிரார்த்தனைகள் நிறைவேறும் வகையில் தக்க சூழ்நிலைகளை வகுத்துக் கொடுப்பார்.

எந்த ஒரு செயலுக்கும் பிரதிவினை சம்பவிப்பது தவிர்க்க முடியாதது. பிரதிவினையும் எதிர்மறையாக இருப்பதும் இயல்பானதே. வசதிகள், அதனால் ஏற்படும் வித்தியாசமான பிரச்னைகள், தேக ஆரோக்கியத்தில்

குறைபாடுகள், அதனால் ஏற்படும் பெரும் பொறுப்புகள், மனச் சோர்வுகள், இவை யாவும் தவிர்க்கவே முடியாத பிரதிபலன்கள்.

எனவே, ஒரு ஞானபுருஷனை அண்டி அடிபணிந்து வணங்கும்போது, நமது ஆசைகளைப் புறம் தள்ளி “சுவாமி எனக்கு எது நல்லது, எது கெட்டது என நான் அறியேன். நின் திருவடி சரணடைகிறேன். எமக்கு எது நன்மை பயக்கும் என்று நீங்கள் தீர்மானிக்கிறீர்களோ, அதையே எமக்கு அருளுங்கள் சுவாமி. நன்மை, தீமை அறியாத நின் பிள்ளையைக் காத்தருள் சுவாமி," என வேண்டும்போது, சுவாமி நம்மைச் சுவீகரித்துக் காத்தருள்கிறார்.

சுவாமியைக் குரு என வரித்தவருக்கு, சுவாமியும் அவரை ஏற்று அடைக்கலம் கொடுக்கும்பட்சம், அங்கு அந்த மாயா ஜாலம் நடைபெறுகிறது. ஆசைகளும், ஆசைகளின் பிறப்பிற்குக் காரணமான ‘நான்’ என்ற அடையாளமும், உணர்வும் நம்மைவிட்டு விலகிவிடுகிறது.

“ஒரு குரு ராஜ குளவி போன்றவர். ராஜ குளவி தகுந்த புழுக்களைத் தன் கூட்டிற்கு எடுத்துவந்து அதை விடாது கொட்டி,

கொட்டித் தன்னைப் போலவே மற்றொரு ராஜகுளவியாக்கிவிடும். அதுபோன்றே குருவானவர், தகுந்த நபரைத் தன் சீடனாக வரித்து, அவருக்குச் சோதனைகளையும், வலிகளையும் தாராளமாகக் கொடுத்து, முடிவில் 'நான்' என்ற உணர்வையே அறுத்தெறிந்து தன்மயமாக்கிக் கொள்வார்.

இந்த வகையான வலிமிகுந்த நடைமுறை யிலிருந்து எந்த ஒரு சீடனும் தப்பவே முடியாது. நல்ல பாம்பின் வாயில் சிக்கிய தவளை எப்படி மீள முடியாதோ, அதே போல் குருவின் பிடியில் இருக்கும் சீடனும் ஒருக்காலும் தப்பிச் செல்ல இயலாது."

சுவாமியின் இந்த வாசகங்களை 1976இல் புன்னை மரத்தடியில் கேட்ட எண்ணற்ற பக்தர்கள், தங்களை சுவாமியிடம் ஒப்புவித்து, இருமை கடந்த இறைமையில் ஒன்றாகக் கலந்தார்கள். மறைந்தார்கள்.

லௌகீக சௌகரியங்களை யாசிப்பவர் களும் இக்கணம் வரை சுவாமியை வேண்டியவாறே வாழ்கின்றனர். அவர்களின் பரிணாம வளர்ச்சிக்கு சுவாமி தன் நாமஜபத்தை அருளி, அதன்மூலம் அவர்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறார்.



*சாதகனுக்கு அருளும் அந்த ஜகத்குரு, பல பக்தரின் வாழ்விலும் ஞான விதை விதைத்து பராமரித்து வருகிறார்.*

*“என் தந்தை எல்லோரையும் தன் நேரடிப் பார்வையிலே வைத்திருக்கிறார். அவர்களின் பரிணாம வளர்ச்சிக்கு என்றும் அருள்பாலிக்கிறார்.”*



# அப்பா அறிவார்

## 03

1970களின் ஆரம்பத்தில், சுவாமி யோகி ராம்சுரத்குமார் புன்னை மரத்தடியில் வீற்றிருந்தார். எதிரே புட்டபர்த்தி சாய் பாபாவின் பக்தர்கள் சுவாமியிடம் தங்களது சாய்பாபாவின் தரிசன அனுபவங் களை மிகவும் உணர்ச்சிப்பூர்வ மாகச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அப்போது சுமார் இரண்டு மாதங்களேயான சிறிய பைரவர் சுவாமியை நோக்கி வேகமாக வந்தார். அவர் நேரடியாக சுவாமியின் முன், பின் கால்களை மடித்து அமர்ந்து கொண்டு,

சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதோ சாய் பாபாவே வந்து விட்டாரே," எனப் பெருமகிழ்வுடன் சுவாமி கூறினார்.

அன்றிலிருந்து பைரவர் சுவாமியின் மற்றொரு அடியவர் ஆனார்.

காலம் கடந்தது. சந்நிதித் தெரு வீட்டில் சுவாமி தன் தர்பாரை நடத்தினார். அங்கே ஒவ்வொரு பக்தருக்கும் ஒரு இடம் ஒதுக்கப் பட்டிருக்கும். எனக்கும், பைரவருக்கும் ஒரே இடம்.

பைரவர் வெளிச் சஞ்சாரம் செய்துவிட்டு நேராக சந்நிதி தெரு வீட்டிற்கு வருவார். சுவாமியின் முன்னால் நிற்பார்.

"பிஸ்கோத் சாப்பிடிரீங்களா சாய்பாபா?" சுவாமி அக்கறையுடன் கேட்பார். அது சரி எனக் குரல் கொடுக்கும்.

சுவாமி ஒரு பாக்கெட் பிஸ்கட்டை பைரவருக்குக் கொடுப்பார். பைரவர் திருப்தியுடன் சாப்பிட்டுவிட்டு நேராக என் இருக்கை நோக்கி வரும். அந்த இடம் எங்கள் இருவருக்கும் பொதுவானது. பைரவர் வெளியில் சாக்கடையில் புரண்டு அழுக்கோடு வருவார். நான் அமர்ந்திருக்கும்

*இடம் நோக்கி வந்து சுவாதீனமாக என் மடியில் படுத்துக் கொள்வார். அவரை சுவாமிக்கு தெரியாமல் (?) எவ்வளவு தள்ளிவிட்டாலும், அவர் முண்டியடித்து என் மடியில் படுத்து உறங்கி விடுவார்.*

*சில சமயங்களில் அவர் வருகையைத் தடுக்க என் முன் அவர் வந்தால் அவரது முன்னங்கால்களை பிடித்து அமுக்கிக் கொடுப்பேன். அதை அவர் சுவாரசியமாக அனுபவிக்கும். நான் கையை எடுத்துவிட்டாலோ அவர் குரல் கொடுக்க ஆரம்பித்து விடுவார்.*

*இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுவாமி, என்னை நோக்கி, "சாய்பாபா உன் னுடைய மசாஜை மிகவும் விரும்புகிறார். தொடர்ந்து செய்வாயாக பார்த்தசாரதி."*

*சுவாமி கூறியதை மறுக்க முடியாமல் ஒரு நாள் முழுவதும் பைரவருக்கு பாத பூஜை செய்திருக்கிறேன்.*

*சாய்பாபாவின் பிரதேசமான அண்ணா மலையார் கோவிலில் ராஜகோபுரத்திற்கு முன்புள்ள மைதானம், பாத்திரக்கடைத் தெருக்கள், சந்நிதித் தெரு இங்கெல்லாம் இவர்தான் ராஜா. இவருடைய இடத்தில்*



எவரும் ஊடுருவினால் பெரிய யுத்தம் வெடிக்கும். வெற்றி எப்போதுமே பைரவருக்குத் தான்.

காலம் கடந்தது. பைரவருக்கு வயோதிகம் வந்தது. அவருடைய மேல் தோலெல்லாம் பூசனம் பிடித்து புண்ணாகிப் போனது. சுவாமி அவரை சந்நிதித் தெரு வீட்டிலேயே வைத்திருந்தார். பைரவரின் நடமாட்டம் நின்று விட்டது.

ஒரு நாள் நான் சந்நிதித் தெரு வீட்டின் பின்புறம் இயற்கை உபாதையைக் கழிக்கச் சென்றேன். அங்கே பைரவர் அந்த நீண்ட தாழ்வாரம் முழுவதும் வயிற்றுப் போக்கால் பாழடித் திருந்தார்.

நான் சுவாமியிடம் விரைந்து நடந்ததைக் கூறினேன். சுவாமி எழுந்து வந்தார். நான், சாக்கடையத் தள்ளுவதற்காக வைக்கப் பட்டிருந்த தென்னங்கீற்று விளக்குமாறைக் கையில் எடுத்து சுத்தம் செய்ய முற்ப்பட்டேன். பைரவரின் வயிற்றுப்போக்கு கடுமையான, தாங்கவே முடியாத துர்நாற்றத்தை பரப்பிக் கொண்டிருந்தது. வேகமாக சேவை செய்யச் சென்ற நான் மயக்கமுறும் நிலை

அடைந்தேன். சுவாமி என் கையிலிருந்த விளக்குமாறைப் பிடுங் கினார். என்னைக் கூடத்திற்கு பலவந்தமாக அழைத்துச் சென்று அமரவைத்தார்.

பைரவர் பாழாக்கிய இடம் முழுவதையும் சுவாமியே சுத்தப்படுத்தினார். சாய் பாபாவை ஈரத்துணியினால் துடைத்தார். அதன் சங்கிலியை சோப்புத் தண்ணீரில் அலம்பினார். வாடை தெரியாமல் இருக்க வாசனை ஊதுபத்திகளை ஏற்றினார். தன்னை நன்றாக சுத்தம் செய்துவிட்டுக் கூடத்திற்குள் நுழைந்தார்.

நான் அங்கு அழுது கொண்டிருந்தேன். சுவாமியை வேலை பார்க்க வைத்து விட்டேனே. நான் என்ன மனிதன். என்னைக் காண எனக்கே அருவருப்பாக இருந்தது.

சுவாமி என்னெதிரில் அமர்ந்தார்.

"அப்பா அறிவார் பார்த்தசாரதி. யார், யார் எந்த மாதிரி வேலைகள் செய்யவேண்டும் என்பதை அப்பாதான் தீர்மானிப்பார். கவலைப்பட வேண்டாம் நண்பா."

இன்றுவரை இந்நிகழ்வு ரணமாக எனக்குள் எங்கோ வலித்துக் கொண்டிருக்கிறது.



# துன்பநிலை மாறியது

# 04

**அ**வர் நிறைமாத கர்ப்பிணி. அவருக்குப் பிரசவ வலி தொடங்கியது. அவரின் கணவர் மனைவியை ஒரு குதிரை வண்டியில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

1970களில் திருவண்ணாமலையில் உள்ளூர் போக்குவரத்திற்கு குதிரை வண்டிகளே பயன்படுத்தப்பட்டன.

மோசமான, பள்ளமும் மேடும் நிறைந்த தெருச் சாலை. நடப்பதற்கே சிரமப்படும் சாலையில் குதிரை தட்டுத்தடுமாறி மெதுவாக வண்டியை

இழுத்துச் சென்றது. பிரம்பினால் வளைத்துச் செய்யப்பட்ட லகுவான வில் வண்டி அது. சிறு பள்ளத்தில் சக்கரம் இறங்கினாலே, வண்டி உள்ளே இருப்பவர்களை வெகுவாக குலுக்கி எடுத்துவிடும்.

அந்த மாதிரியான ஒரு குதிரை வண்டியில் மனைவியை அழைத்துக் கொண்டு கணவர் மருத்துவமனை சென்று கொண்டிருந் தார். வண்டி குலுங்கியவாறே மெதுவாகச் சென்றது. ஒவ்வொரு பள்ளத்திலும் வண்டி குலுங்கியபடி செல்லும்போதெல்லாம் அந்த கர்ப்பிணி மாது வலியால் துடித்தார்.

அவர் வாயிலிருந்து சுவாமியின் நாமம் சிறிது சத்தமாக வெளிப்பட்டது.

"யோகி ராம்சுரத்குமார், யோகி ராம்சுரத் குமார், யோகி ராம்சுரத்குமார்"

அம்மாது நாமத்தை விடாது உச்சரித்தார். உடன் வந்த கணவரின் வாயிலிருந்தும் நாமம் வழிந்தோடியது.

அதே தெருவின் திருப்பத்தில் சுவாமி நின்று கொண்டிருந்தார். குதிரை வண்டி வருவதையே பார்த்துக் கொண்டிருந்தார். வண்டியின் கூடு இருபக்கமும் சாய்ந்தபடி,



தள்ளாடித் தள்ளாடி உள்ளிருப்பவர்களை தாட்சண்யமே இல்லாமல் உருட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

சென்று கொண்டிருந்த வண்டியின் பின்புறம் சென்றார். தன் உறுதியான கரங்களால் வண்டியின் இருபக்கத்தையும் ஆடாது சிக்கென பிடித்துக் கொண்டார். வண்டியின் குலுக்கல் மட்டுப்படுத்தப் பட்டது.

கணவரும் மனைவியும் கைகூப்பி கண்களில் நீர் மல்க வணங்கினர்.

*தெருச் சாலை முடிந்து பிரதான சாலை வந்தது. குதிரை வேகமெடுத்தது. சுவாமி அந்த வேகத்திற்கு ஈடுசெய்தவாறு, வண்டி குலுங்காமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வண்டியோடு வேகமாக ஓடினார்.*

*மருத்துவமனை வந்தது. அந்த மாது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சற்று நேரத்தில் அவர் ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலமாக இருந்தனர்.*

*செய்தி கேட்டபின் சுவாமி தன் வழியே சென்றார்.*



# மரணம்

# 05

*தன்னுடைய அன்புக்குரிய பக்தரின் மரணத்தால் சுவாமி யோகி ராம்சுரத் குமார் கண் கலங்கியபோது, பக்தரின் தாயார் சுவாமியிடம் கேட்டார்:*

*"சுவாமி, மரணம் குறித்து பற்றும், ஆசையும் உடைய எங்களைப் போன்றோர் கலங்குவது இயல்பு. ஆனால், பற்றறுத்த தங்களைப் போன்ற ஞானிகள் கலங்குவது ஆச்சரியமளிக்கிறது சுவாமி."*

*சுவாமி வெகு நேரம் மௌனமாக கண்*



கலங்கியபடி இருந்தார். மாறி மாறி சிகரெட் பிடித்தபடி இருந்தார்.

"வாலியின் மனைவி தாரா ஒரு ஞானி. தன் கணவனின் மரணத்தினால் கண்ணீர் சிந்தியபடி இருந்தாள். ராமபிரான் அவருக்கு ஆறுதல் கூறினார். 'தாரா நீ அனைத்தும் உணர்ந்தவள். அழிந்தது வாலியின் சரீரமேயன்றி ஆத்மா அல்ல. ஆத்மா அழிவற்றது என நீ அறிவாய். அறிந்திருந்தும் நீ சோகத்தில் மூழ்கலாமா?"

தாரா பதிலளித்தாள். "ராமா ஆத்மா அழிவற்றது என நான் அறிவேன். எனினும் அழிவற்ற அந்த ஆத்மா அழிவடையும் சரீரத்தோடு இணைந்திருக்கும்போது வாலி என்ற ஒரு உருவம் இருந்ததே, அதை நான் இனி என்று பார்ப்பேன்?"

இதைச் சொல்லும்போதே தாராவின் கண்களில் நீர் வழிந்தது.

சுவாமி சற்று நேரம் மௌனமானார்.

"இனி இந்த பிச்சைக்காரன் நண்பரின் ரூபத்தைக் காண முடியாதே?"

சுவாமியின் கண்களில் கங்கை வடிந்தாள்.

1970களிலிருந்து சுவாமியை அறிந்த ஒருவர் சந்நியாசம் பெற்றார். பஜனைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவரான அவருக்கு ஏராளமான பக்தர்கள் உண்டு. அவரும் அவரது பக்தர்களும் இமயமலை யாத்திரை சென்றனர். அங்கே உள்ள இரு நதிகளின் சங்கமத்தில் அந்த சந்நியாசி புனித ஸ்நானம் செய்ய ஆற்றின் படித்துறையில் இறங்கினார்.

ஆற்று நீர் திடீரெனப் பொங்கி அவரை இழுத்துச் சென்று மூழ்கடித்துவிட்டது. அவரின் சரீரத்தை அதன்பின் யாரும் கண்டுபிடிக்க முடியவில்லை. தகவல் தெரிந்த சுவாமியின் பக்தர் ஒருவர், சுவாமியிடம் ஓடோடி வந்தார். செய்தியை சுவாமியிடம் சொன்னார். அங்கு வெகு நேரம் அமைதி நிலவியது.

திடீரென சுவாமி சொன்னார்,

"அதனால்தான் இந்த பிச்சைக்காரன் ஸ்நானம் பண்ணுவதே இல்லை."

சுவாமி கூறியதைக் கேட்ட அனைவரும் விக்கித்துப் போயினர்.



# மரண ஆறுதல்

# 06

1970களின் இறுதியில் சுவாமி யோகி ராமசுரத்குமாருக்கு யாரோ ஒரு பக்தர் ஜே.கிருஷ்ணமூர்த்தியின் கமென்டரிஸ் ஆன் லிவிங் (சிஷீனீனீமீஸீமீ ணீகூஷீவீமீஃ ஷீஸீ லிவீஸ்வீஸீரீ) என்ற புத்தகத் தொகுப்பை அனுப்பி இருந்தார். அப்புத்தகங்கள் சில நாட்களாக பிரிக்கப் படாமலேயே சுவாமியின் படுக்கை அருகிலேயே இருந்தன.

அன்று ஏனோ சுவாமி அந்த புத்தகத் தொகுப்பைக் கையில் எடுத்து அதைப் பார்த்தபடி வெகுநேரம் இருந்தார்.

மூன்று புத்தங்கள் கொண்ட அந்தப் புத்தக பண்டலை சுவாமி பிரித்தார். அதிலிருந்து ஒரு புத்தகத்தை மட்டும் தனியே எடுத்து அதைச் சற்று நேரம் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தார். பின்னர் ஒரு குறிப்பிட்ட அத்தியாயத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பக்கத்தில் தன் கரம் பதித்து, எதிரில் அமர்ந்திருந்த என்னை அழைத்தார்.

நான் சுவாமியின் அருகில் சென்றேன். சுவாமி தேர்ந்தெடுத்த அந்த அத்தியா யத்தைச் சத்தமாக படிக்கச் சொன்னார்.

நான் ஆங்கிலத்தில் இருந்த அந்த அத்தியாயத்தை படிக்க ஆரம்பித்தேன். சுவாமி மௌனமாக நான் வாசிப்பதைக் கேட்டவாறு மாறி மாறி சிகரெட் பிடித்தபடி இருந்தார்.

அந்த அத்தியாயத்தின் சாரத்தை கீழ்கண்ட வாறு தமிழில் சொல்லாம்:

'கிருஷ்ணாஜியும், அவரது அன்பர்களும் அந்த அறையில் குழுமியிருந்தனர். கிருஷ்ணாஜி திடீரென ஒரு சம்பவத்தை விவரிக்கலானார்.

இங்கே ஒரு மனிதன் இன்னும் சற்று நேரத்தில் அவனைப் பீடித்த கொடும் நோயால்



தன் உயிரை இழக்கப் போகிறான். அவன் வலியால் துடித்துக் கொண்டிருக்கிறான். இன்னும் சற்று நேரம்தான், அவன் சடலமாகிவிடுவான். அவனுக்கு எப்படி ஆறுதல் அளிப்பீர்கள்?

கிருஷ்ணாஜியின் கேள்வி அங்குள்ளவர்களைச் சிந்திக்க வைத்தது. ஒருவர் கூறினார்,

“நண்பா, கவலைப்படாதே. மாய்ந்து மடியப்போவது உன் சரீரமே. நீ அந்தச் சாவற்ற பரமாத்மா. எனவே, உனக்கு

*மரணமே இல்லை. நீ பிறப்பு, இறப்பு கடந்த ஆத்மன். எனவே கவலையற்றிரு நண்பா என்று நான் அவரிடம் கூறுவேன்."*

*அவர் கூறியதைக் கேட்ட கிருஷ்ணாஜி, 'அவன் மரணவேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறான். உன்னுடைய தத்துவம் அவனுள் செல்லாது. வெறும் வார்த்தை களால் ஆறுதல் அடையும் நிலையில் அவன் இல்லை.'*

*கிருஷ்ணாஜி மற்ற நண்பர்களைப் பார்த்தார். அனைவரும் தத்துவ மழை பொழிந்தனர். அனைத்தும் வெறும் சொற்கள்தான் எனக் கூறி கிருஷ்ணாஜி அனைவரது கூற்றையும் புறம்தள்ளினார்.*

*முடிவில் ஓர் அன்பர், 'கிருஷ்ணாஜி, நீங்கள் அவ்விடத்தில் இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?' என்று கேட்டார்.*

*கிருஷ்ணாஜி சற்று நேரம் அமைதியாக இருந்தார். அவர் விழிகளில் ஈரம் கசிந்தது.*

*"நான் அவர் அருகில் செல்வேன். அவர் கையை இதமாகப் பற்றிக் கொள்வேன். 'நண்பா என்னுள் இருக்கும் ஏதோ ஒன்று, உன்னோடு சேர்ந்து செல்லப் போகிறது,'*

*என்று மௌனத்தில் கூறுவேன்."*

*இவ்விதம் கூறிவிட்டு கிருஷ்ணாஜி அந்த அறையை விட்டுச் சென்றுவிடுகிறார்.'*

*நான் படித்து முடித்தேன்.*

*சுவாமியைப் பார்த்தேன். விழி ஓரத்தில் கசிந்த நீரைத் தான் போர்த்திருந்த சால்வையால் துடைத்துவிட்டுத் தெய்வீகமாகப் புன்னகைத்தார். அந்தப் புன்னகையில் சிருஷ்டியின் முழுமை தெரிந்தது.*



# வாக்கை காப்பாற்ற வேண்டும்

## 07

1977இன் ஆரம்பத்தில், தேரடி மண்டபத்தில் சில பக்தர்கள் சுவாமி யோகி ராம் சுரத்குமாரின் வருகைக்காக காத்திருந்தனர். அது மாலை நேரம். இருள் சிறிது சிறிதாக பரவத் தொடங்கியது.

சுவாமி தன் பரிவாரங்களுடன் புன்னை மரத்தடியிலிருந்து தேரடி மண்டபம் வந்தார். மண்டபத்தின் முதல் படியில் கால் வைத்தவர் சற்றே தயங்கினார். உடன் சாக்கு

மூடைகளுடன் வந்தவர்களை மண்டபத்தின் மேலே சென்று சாக்கு மூடைகளை இறக்கி வைக்கச் சொன்னார்.

சுவாமி மட்டும் கீழ்படியில் நின்றவாறு மண்டபத்தில் இருந்த பக்தர்களை உற்றுப் பார்த்தவாறு இருந்தார்.

"முருகா, இங்கே வாங்க" சுவாமி முருகனை அழைத்தார். பக்தர்களோடு அமர்ந்திருந்த முருகன் கீழிறங்கி வந்தார்.

"இங்கு எதுக்கு வந்தீங்களா?" சுவாமி வினவினார்.

"சுவாமியை பார்த்துப் போக வந்தேன் சுவாமி."

"இந்தப் பிச்சைக்காரரை எப்ப கடைசியாக பார்த்தீங்களா?" முருகன் யோசித்தார்.

"ஒரு வருஷம் ஆயிருக்கும் சுவாமி."

"அப்ப இந்த பிச்சைக்காரர் கிட்ட என்ன சொன்னீங்களா?" முருகன் மீண்டும் யோசித்தார்.

"என் பையனுக்கு உடம்பு முடியலைன்னு சொன்னேன் சுவாமி. குலதெய்வத்துக்கு முடி காணிக்கை கொடுக்காததால அடிக்கடி

*அவனுக்கு உடம்பு முடியாமல் போகுதான்னு சுவாமிகிட்ட கேட்டேன் சுவாமி."*

*"இந்த பிச்சைக்காரர் என்னா சொன்னார்?"*

*"காணிக்கை கொடுக்க வேண்டிக்கிட்டா, அதை உடனே செஞ்சிடனும்னு சொன்னீங்க சுவாமி. பையனுக்கு சரியாப் போயிடும்னு சொன்னீங்க சுவாமி."*

*"பையனுக்கு சரியா போச்சா?"*

*"சரியாப் போச்சு சுவாமி."*

*"காணிக்கைகொடுத்தீங்களா?"*

*"இல்லை சுவாமி. நேரமே கிடைக்கலை சுவாமி."*

*"இப்போ எதுக்கு வந்தீங்களா?" சுவாமியின் குரலில் கோபம் கொப்பளித்தது.*

*"சுவாமி வியாபாரம் சரியாகவே ஓடலை சுவாமி. அதான் சுவாமிகிட்ட ஆசி வாங்கிட்டுப் போலாமேன்னு வந்தேன் சுவாமி."*

*"குலதெய்வத்துக்கு வேண்டிக்கிட்டத செய்ய நேரமே இல்லை. ஆனால், அப்பா உங்க குறையெல்லாம் கேட்கணும். ஹும். வார்த்தை கொடுத்தா காப்பாத்த*



வேண்டாமா? அப்பாவை ஏமாத்தலாமுனு நினைச்சீங்களா?"

"சுவாமி எங்க குலதெய்வம் திருச்செந்தூர் முருகன் சுவாமி. அது ரொம்ப தூரத்தில் இருக்கு சுவாமி. நான் வேணா அண்ணாமலை யார் கோவில்ல பையனுக்கு மொட்டை அடித்து அங்கு இருக்கிற முருகன் சந்நிதியிலே என் வேண்டுதலை செலுத்துறேனே சுவாமி."

"திருச்செந்தூர் குலதெய்வத்துக்கு வேண்டுதல் வைப்பார். ஆனா அதை இங்கே செலுத்துவாராம். பேச்சில சுத்தம் வேண்டாம். நாணயம் வேண்டாம். எங்க வேண்டிக்கிட்டீங்களோ அங்கதான் காணிக்கை செலுத்தணும். அப்பாவை ஏமாத்த நினைக்கக் கூடாது."

"சுவாமி நான் சீக்கிரமா போயி பிரார்த்தனைய நிறைவேத்துறேன் சுவாமி. எங்கள ஆசீர்வாதம் பண்ணு சாமி." முருகன் கெஞ்சினார்.

"அப்பாவுக்குக் கொடுத்த வாக்கை முதல்ல செஞ்சி முடிங்க. மற்றதெல்லாம் பின்னால் பார்க்கலாம்."

*சுவாமியின் கோபம் குறையவில்லை. முருகன் சுவாமியை நமஸ்கரித்து விட்டு வேகமாகச் சென்றார்.*

*சுவாமி மண்டபத்தில் உள்ள மற்ற பக்தரைப் பார்க்க படியேறிச் சென்றார்.*



# தந்தை பொறுத்துக் கொள்ளமாட்டார்

# 08

**அ**வர் சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் எளிமையான, இனிமையான பக்தர். அவரது, எளிமையும், அமைதியான பக்தி சிரத்தையும் காண்பதற்கு மிகவும் அரிதானது. சுவாமி அந்தப் பக்தர்பால் கொண்ட பேரன்போ அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. அந்தப் பக்தர் அரசாங்க அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சுவாமியின் சேவைக்கெனவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

*ஆசுகவி கி.வா.ஜகந்நாதன், சுவாமி முன் பாடிய நூற்றுக்கணக்கான பாடல்களை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து, பின்னர் அப்பாடல்களைத் திரும்பத் திரும்பக் கேட்டு அவற்றை எழுதிச் சரிபார்த்து, அதன் பின்னர் சரிபார்த்த பாடல்களை கி.வா.ஜ.வுக்கே அனுப்பி வைப்பார்.*

*கி.வா.ஜ., அதை, பிழை இருந்தால் திருத்தி அவற்றை அப்பக்தருக்கே திருப்பி அனுப்புவார். அப்பக்தரின் சீரிய, சிரத்தையான முயற்சி யினாலேயே இன்று நாம் அனைவரும் கி.வா.ஜ. வின் பாடல்களைப் படித்து பயனுற முடிகிறது.*

*இவை எல்லாம் 1970களின் கடைசியிலும், 1980களின் ஆரம்பத்திலும் நடைபெற்றது.*

*அந்த இனிமையான பக்தர் 1980களின் ஆரம்பத்தில் ஒரு நாள் சுவாமியை தரிசிக்கக் காலைப் பொழுதில் சந்நிதித் தெரு வீட்டிற்கு வந்தார்.*

*சுவாமி, அவரைத் தன் எதிரில் பாயில் அமர்த்தி வெகுநேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது இரண்டு சகோதரர்கள் சுவாமியின் அருள் வேண்டி சுவாமியிடம் வந்தனர். சுவாமி அவர்களையும் அந்த*



எளிமையான பக்தருக்கு அருகில் அமர வைத்தார்.

மதிய நேரமானது. உணவு வந்தது. வந்த உணவை சுவாமி அனைவருடனும் பகிர்ந்து கொண்டார்.

உணவு முடிந்ததும் சுவாமி தனது பாயில் படுத்துக் கொண்டார். தன் கையில் இருந்த பனைஓலை விசிறியை அந்த எளிமையான பக்தரிடம் கொடுத்தார். அந்த எளிமையான பக்தர் சுவாமியிடம் விசிறியைப் பக்தியோடு

பெற்றுக்கொண்டு, சுவாமியின் அருகில் அமர்ந்து இதமாக வீச ஆரம்பித்தார். அந்த பக்தரின் பக்தி, இளம் தென்றலாக மாறி சுவாமியைத் தூங்க வைத்தது.

இதனிடையே அந்த இரண்டு சகோதரர்களும் காலையில் இருந்து கால் மாற்றாமல் அமர்ந்திருந்ததால், மிகவும் களைப்படைந்து இருந்தனர். அவர்கள் கால்கள் வலியால் அவஸ்தை அடைந்திருந்தது. அந்த எளிமை யான பக்தர் சுவாமியின் தலைமாட்டில் அமர்ந்து வீசிக் கொண்டிருந்ததால், சுவாமி யால் சகோதரர்களைக் காண முடியாது என்று எண்ணி, மூத்த சகோதரர் தன் கால்களை அந்த எளிமையான பக்தரின் முதுகுப் பக்கமாகச் சற்றே நீட்டி அமர்ந்தார்.

அவரது கால்கள் இன்னும் கொஞ்சம் அவரறியாமலே நீண்டது. கால்கள் சற்றே ஆடி, ஆசுவாசப்படுத்திக் கொண்டன. ஒரு முறை அவரது கால்கள் அந்த எளிமையான பக்தரின் முதுகைத் தீண்டி விட்டது.

சுவாமி சட்டென எழுந்தார். கால்களை நீட்டியிருந்த சகோதரர் கால்களை மடித்துக் கொண்டு அமர்ந்தார்.

*"இந்தப் பிச்சைக்காரன் முன்னாலேயே என் அன்புக்குரிய நண்பனைக் காலால் தீண்டுவாயா? யார் உனக்கு இந்த தைரியத் தைக் கொடுத்தது? இந்தப் பிச்சைக்காரனை எவ்வளவு அவமானப்ப டுத்தினாலும் இவன் தாங்கிக் கொள்வான். ஆனால், என் அன்புக்குரிய நண்பனை யார் அவமானப்படுத்த நினைத்தாலும் என் தந்தை ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டார். நீங்கள் இருவரும் இப்பொழுதே இங்கிருந்து சென்று விடுங்கள்."*

*சுவாமி கர்ஜித்தார். இருவரும் சென்ற பின்னரே சாந்தமானார்.*



# தகுந்த ரூபம் எடுத்து தந்தை உதவுவார்

# 09

1980களின் ஆரம்பத்தில் பஞ்சாப் மாநிலத்தில் பயணம் செய்வதே பெரிய சாதனை என்றிருந்த நேரம். பேருந்திலோ, ரயில் பயணமோ எதில் சென்றாலும் ஒருவித அச்ச உணர்வு மக்களிடையே வேரூன்றி இருந்த காலம் அது.

சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் அடியவர் ஒருவர் பஞ்சாப் மாநிலத்திற்கு வியாபார நிமித்தமாக அடிக்கடி சென்றுவர வேண்டிய

*கட்டாயம் இருந்தது. ஒவ்வொரு முறையும் அவர் பயணப்படும் போதெல்லாம் சுவாமி யோகி ராம்சுரத்குமாரைத் தன் மனத்தில் சிக்கென பிடித்து இருத்தி வைத்துக் கொள்ள பெரு முயற்சி செய்வார்.*

*பஞ்சாபின் அப்போதைய பயங்கர சூழலுக்குக் காரணமான ஒரு தீவிரவாதியை அந்த அன்பர் அமிர்தசரசில் சந்திக்க நேர்ந்தது. சந்திப்பு அமிர்தசரசில் உள்ள பொற்கோவிலில் நடை பெற்றது. சம்பிரதாயமான சில கேள்வி பதில்கள். அவ்வளவுதான், சந்திப்பு வெகு விரைவில் முடிந்து விட்டது.*

*அந்த அன்பர் ஊர் திரும்பினார். வழக்கம்போல் சுவாமியைத் தரிசிக்க திருவண்ணாமலை சென்றார்.*

*"பஞ்சாபில் உங்களது பயணம் பாதுகாப்பாக இருந்ததா?" சுவாமி வினவினார்.*

*"சிறிது பயமிருந்தது சுவாமி. ஆனாலும் சமாளிக்க முடிந்தது சுவாமி." அன்பர் பதிலுரைத்தார்.*


*பின்னர், தான் அந்தத் தீவிரவாதியைச் சந்தித்ததை அன்பர் சுவாமியிடம் விவரித்தார். சுவாமி அன்பர் கூறியதை*

*மிகுந்த கவனத்துடன் கேட்டார். பின் நீண்ட நேரம் அங்கு ஆழ்ந்த மௌனம் நிலவியது. சுவாமி அடுத்தடுத்து விடாமல் சிகரெட் புகைத்தவண்ணம் இருந்தார்.*

*"நண்பா, நீங்கள் பஞ்சாபில் பயணம் செய்யும்போது ஏதேனும் ஆபத்து ஏற்படுகையில், இந்தப் பிச்சைக்காரனை நினைவு கூர்ந்தால், இந்தப் பிச்சைக்காரன் தன் சரீரத்தைத் தூக்கிக்கொண்டா உங்கள் உதவிக்கு ஓடி வருவான்? இல்லை நண்பா. என் தந்தை உங்கள் உதவிக்குகந்த ஜீவன் எவரையாவது அங்கே உடனடியாக உங்களைப் பாதுகாக்க அனுப்புவார். என் தந்தை எங்கும் நிறைந்தவர். எல்லா சொரூபமும் அவரது அனந்த சொரூபமே. நீங்கள் என் தந்தையை நினைவுகூர்ந்தால் போதும். என் தந்தை உங்களைக் காப்பதற்கு தகுந்த ரூபமெடுத்து ஓடோடி வருவார்." சுவாமி மெதுவாகப் பாட ஆரம்பித்தார்.*

*"யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா ".*

*அங்கே அமர்ந்திருந்த அனைவரும் சுவாமியைப் பின்தொடர்ந்து பாடினர். தெய்வீகமும் பக்தி பரவசமும் அங்கே ஒருங்கே*



சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருந்தது.

இந்த சம்பவம் நடந்து சரியாக ஒரு மாத காலத்தில் அந்தத் தீவிரவாதி அரசாங்கம் எடுத்த ராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டார்.

"நம் பாரதத் திருநாட்டின் அடர்ந்த வனங்களிலும், மலைகளில் உள்ள இருண்ட குகைகளிலும், பனி படர்ந்த மலைச் சிகரங்களிலும், நாட்டில் என்றும்

*வற்றாது பாயும் ஜீவ நதிகளின் தீரங்களிலும் என்றென்றும் என் தந்தையையே தியானித்து வாழ்ந்துகொண்டு வரும் எண்ணற்ற மஹாத்மாக்களின் அனுக்கிரஹத்தால், நம் புண்ய பாரத பூமி எக்காலத்திலும் யுத்த களமாக மாறாது என என் தந்தை உறுதியாகக் கூறுகிறார்."*

*1970களின் கடைசியில், சந்நிதித் தெரு வீட்டில், நட்ட நடுநிசியில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் உரக்க முழங்கியது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.*



# பரப்பிரம்மம்

# 10

1980களின் ஆரம்பம். சுவாமி யோகி ராம் சுரத்குமார் அவர்களுடன் நாட்கணக்கில் கழித்த உன்னதமான காலம்.

எந்தவிதமான சம்பிரதாயமோ, சடங்குகளோ இல்லாது சுவாமியுடன் நகர்வலம் வந்த காலம்.

உள்ளத்தில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாது, சிந்தனைகளோ, கவலைகளோ, எண்ணங்களோ சற்றும் இல்லாது பேரின்ப அமைதியோடு, சுவாமியின்

*கைப்பிடியில் மயங்கியிருந்த காலம். அன்று அண்ணாமலையார் கோவிலுக்கு சுவாமி அழைத்துச் சென்றார்.*

*கோவில் தரிசனம் முடித்து, ராஜகோபுரம் வழியாக சுவாமி எங்களை அழைத்துச் சென்றார். தேரடி வீதி வந்தது. பெரிய தேரின் அருகே ஒரு பொரி வியாபாரி, பெரிய பொரி மூடையுடன் அமர்ந்திருந்தார். சுவாமி அவர் எதிரில் சென்று வீதியில் இருகால்களையும் வளைத்துக் குந்தியமர்ந்தார். என் கையை விடுவித்தார்.*

*"பொரி என்னா விலை தம்பி?" சுவாமி விலை விசாரித்தார். வியாபாரி விலை சொன்னார்.*

*"விலை ரொம்பக் கூடிப் போச்சே! சரி, எங்கள் எல்லோருக்கும் கால்படி, கால்படி போடுங்க," சுவாமி தன் ஜிப்பா பையிலிருந்து பணத்தை எண்ணிக் கொடுத்தார்.*

*முதலில் சுவாமி தன் ஜிப்பாவின் முன்நுனிப் பகுதியை வளைத்துக் காட்ட வியாபாரி அதில் கால்படி அளந்து பொரியைப் போட்டார். சுவாமியுடன் வந்த ஆண்கள் தங்கள் சட்டைகளின் கீழ் பகுதிகளை வளைத்துக் குழி செய்து அதில் பொரியைப்*

பெற்றுக் கொண்டார்கள். பெண்கள் தங்கள் சேலைகளின் முந்தியில் பொரியைப் பெற்றுக் கொண்டனர்.

மீண்டும் வீதியுலா தொடங்கியது. சுவாமி பொரியை சாப்பிட்டவாறு நடக்கச் சொன்னார்.

சுவாமியுடன் வந்த நாங்கள் அனைவரும் ஒருவித பிரம்ம மயக்கத்தில் வீதியில் பொரி சாப்பிட்டவாறு வந்தோம்.

தேரடி வீதியும், திருமஞ்சன வீதியும் சந்திக்கும் இடத்தில் இருந்த ஒரு கடலைக் கடை முன்னே சுவாமி நின்றார்.

"தம்பி, எங்கள் எல்லோருக்கும் காராப் பூந்தியும், பொட்டுக் கடலையும் போடுங்கள்."

சுவாமி, ஒரு கையால் பொரி இருந்த ஜிப்பா மூலையை மடித்துப் பிடித்துக்கொண்டு, மறுகையால் ஜிப்பாவின் பையிலிருந்து காசை எடுத்து மிகுந்த சிரமப்பட்டு, கடைக்காரரிடம் கொடுத்தார்.


கடைக்காரர் எல்லோரின் மடியிலும் பொட்டுக் கடலையும், காராப்பூந்தியும் குத்துமதிப்பாகப் போட்டார்.



*மீண்டும் வீதியுலா தொடங்கியது. பொரியையும், பொட்டுக்கடலையையும், காராப்பூந்தியையும் நன்றாகக் கலந்து சுவாமி சாப்பிடச் சொன்னார்.*

*நாங்கள் ருசித்துச் சாப்பிட்டவாறே சுவாமி யுடன் நடந்தோம். வீதியில் எங்கள் கண்களில் எவரும் தெரியவில்லை. நாங்களும் சுயப் பிரக்ஞையற்று காணாமல் போய்விட்டோம். பரப்பிரம்மம் மட்டுமே அங்கே நடை பயின்று கொண்டிருந்தது. அந்த நாட்கள்...*

❀



# தந்தையின் விருப்பம்

## 11

அந்த நண்பர்கள் சுவாமி யோகி ராம்சுரத் குமாருடன் சந்நிதித் தெரு வீட்டில் தனித்து இருந்தனர். அந்த நண்பர்கள் சுவாமியுடன் இருக்கும் காலத்தில் சுவாமி வேறு பக்தர்களை அனுமதிப்பதில்லை.

சில வருடங்களாகவே 1980களின் ஆரம்பத்தில் இம்மாதிரியான நடைமுறையை சுவாமி ஏற்படுத்தினார்.


ஒரு சமயம், திருவண்ணாமலை தீபத் திருவிழா காலத்தில், நண்பர்கள், சுவாமியை தரிசனம்

செய்ய வந்திருந்தார்கள். சுவாமி அவர்களை சந்நிதித் தெரு வீட்டில் தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார்.

நான்கு நாட்கள் இரவு பகலாக சுவாமி நண்பர்களுடன் அளவளாவி மகிழ்ந்திருந்தார். நண்பர்களுக்குப் பசி, தாகம் எல்லாம் மறந்து விட்டது. நேரம் செல்வதே அறியாது ஆனந்த சாகரத்தில் மிதந்திருந்தனர்.

அங்கே இலக்கியம் பேசப்பட்டது. அரசியல் விவாதிக்கப்பட்டது. சமூக நடைமுறைகள் ஆராயப்பட்டது. மதக் கோட்பாடுகள் பறிமாறப்பட்டன. ஞானிகளின் வாழ்க்கை முறை விவரிக்கப்பட்டது. ஞானிகளின் உபதேசம் போதிக்கப்பட்டது. நாடுகளின் அரசியல் அமைப்புக்கள், நாடுகளின் தலைவர்கள் என பல்வேறு விஷயங்கள் அலசி ஆராயப்பட்டன. விஞ்ஞானமும், மெய்ஞான விவேகமும் சீராய்வு செய்யப்பட்டது.

அங்கே நேரம், இடம், பொருள் கடந்த ஓர் உன்னதப் பெருவெளியில் சுவாமி நண்பர்களுடன் உலா வந்து கொண்டிருந்தார். அங்கே பேரானந்தம் கரை கடந்து பிரவாகமாகச் சென்று கொண்டிருந்தது. சுவாமியும் நண்பர்களும், சிரித்தனர்,



*அழுதனர், மௌனித்தனர். ஒரு நண்பர் சுவாமியிடம் வினவினார்.*

*"சுவாமி, இங்கு நாம் பல்வேறு விஷயங்கள் பற்றி கடந்த நான்கு நாட்களாக பேசி வருகிறோம். ஆனால், வெளியில் உள்ள நண்பர்களோ தாங்கள் எங்களுக்கு தனித்து ஆன்ம போதத்தை உபதேசம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள்," என்று கூறினார்.*

*நண்பரின் உரை கேட்ட சுவாமி வெகுநேரம் மௌனமாக இருந்தார். மாறி மாறி சிகரெட் பிடித்தபடி இருந்தார். நண்பர்கள் சுவாமியின் மௌனத்தில் கரைந்தனர்.*

*"நண்பா, நாம் இங்கு தனிமையில் பல்வேறு விஷயங்கள் பற்றி பேசுவது முக்கியமானதல்ல. நாம் தந்தையுடன் ஒன்றாக இருப்பதே உணரத்தக்கது. மற்றவை எல்லாம் வெறும் நீர்த்து போகும் விஷயங்கள். என் தந்தை நம்மைத் தனித்து தன்னோடு வைத்திருக்கும்போது நாம் அடையும் பேரானந்தம் நம்மை மட்டுமல்ல, இவ்வுலகையே சீர்படுத்தும்.*

*தந்தையுடன் ஒன்றியிருப்பதே வாழ்க்கை*

நண்பா. மனித குலத்தின் இலக்கும் தந்தையுடன் ஒன்றியிருப்பதே ஆகும். இந்தப் பிச்சைக்காரனுக்கு என் தந்தை கொடுத்த பணியும் இதுதான் நண்பா.

இந்த பிச்சைக்காரனின் சரீரம் என்றாவது மறைந்துவிடும். எனினும் அவனது இருப்பை உறுதியான வைராக்கியத்துடன் எவராயினும் அவனின் நாமத்தைச் சொல்லி அடையப் பெறலாம்.

இந்த பிச்சைக்காரனின் நாமத்தை மனத்தில் நிலைநிறுத்தி வாழும் நண்பர்களுக்கு என் தந்தையுடனான ஒன்றுதல் கண்டிப்பாக நடக்கும் என என் தந்தை உறுதியாகக் கூறுகிறார்."

சுவாமி மெதுவாக, இனிமையாகப் பாட ஆரம்பித்தார்.

"யோகி ராமசுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா"



# ஆரம்பப் பாடம்

# 12

நண்பர்கள் இருந்த சிவகாசி நாடார் சத்திரத்தின் ஏழாம் எண் அறைக்குள் சுவாமி யோகி ராம்சுரத்குமார் திடீரென வந்தார். வரும்போதே ஓர் இந்திப் பாடலை மிகவும் மகிழ்வுடன் பாடிக் கொண்டிருந்தார்.

வெகு தூரம் நண்பர்கள் காரில் வந்த சோர்வு, சுவாமியின் குரல் கேட்டதும் மாயமாக மறைந்தது. அறைக்குள் சுவாமியை அமரவைத்தோம்.

சுவாமி மீண்டும் அதே பாடலைப் பாடினார்.

சற்றுநேரம் கழித்து அப்பாடலின் பொருளை ஆங்கிலத்தில் உரைத்தார்.

“யசோதா தன் தோழியிடம் கூறுகிறாள், உனக்குத் தெரியுமா, கிருஷ்ணன் பேச ஆரம்பித்துவிட்டான். நந்தனை அப்பா என்கிறான். என்னை அம்மா என்கிறான். பலராமனை அண்ணா என்கிறான். என் மகன் பேச ஆரம்பித்துவிட்டான் தோழி.”

பொருள் சொல்லி முடித்ததும் சுவாமி மகிழ்ச்சியுடன் உரக்கச் சிரித்தார். சிரிப்பு சாகரம் சுவாமியிடமிருந்து அலையலையாக வந்து கொண்டே இருந்தது.

நாங்கள் ஆரம்பப் பாடம் கற்றுக் கொண்டோமோ எனச் சுவாமியிடம் கேட்டதற்கு மறுபடியும் மாசில்லா சிரிப்பே பதிலாகக் கிடைத்தது. இச்சம்பவம் 1980ஆம் வருடம் நடந்தது.

❀



# தலைவர்களே தவறு செய்கிறார்கள்

# 13

1981ஆம் வருட ஆரம்பத்தில் ஒரு நாள் காலை. சந்நிதித் தெரு வீட்டில் பக்தர்கள் குழுமியிருந்தனர். சுவாமி யோகி ராம்சுரத்குமார் பக்தர்களை ஒவ்வொருவராக உற்றுப் பார்த்து பேரருள் புரிந்து கொண்டிருந்தார். விசிறியை உயர்த்திப் பிடித்து அடியவர்களை அண்ணல் ஆசிபுரிந்த காட்சி பேரழகுடன் பார்ப்பவரைப் பிரமிப்படையச் செய்தது.

பக்தர்களின் கூட்டத்திலிருந்து தீனமாக ஒரு விசும்பல் சப்தம் கேட்டது. பெண்கள் அமர்ந்திருந்த பகுதியிலிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியின் கண்கள் நீர் கோத்து கலங்கியிருந்தது.

ஆண்கள் அமர்ந்திருந்த பகுதியில் இருந்து அப்பெண்மணியின் கணவர் சைகை மூலம் தன் மனைவியை அமைதியாக இருக்கக் கூறினார். அவர் கண்களும் கலங்கி இருந்தன.

சுவாமி இருவரையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் இருந்தார். சற்றுநேரம் கடந்தது. சுவாமி விசிறியை கீழே வைத்தார். சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார். ஆழ்ந்து புகைத்தபடியே அந்த தம்பதி மீது தன் கவனத்தைச் செலுத்தினார்.

"நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?" சுவாமி வினவினார்.

சுவாமியின் கருணை ததும்பும் குரலைக் கேட்ட தம்பதியர் இருவரும் கண்ணீர் வடித்தனர்.

"சுவாமி, எங்களுக்கு ஒரே மகள். ஓராண்டுக்கு முன் எங்கள் மகள் மாற்று சாதியைச் சேர்ந்தவரை எங்களிடம் சொல்லாமல் திருமணம் செய்து கொண்டாள்.



திருமணத்தைப் பதிவு செய்துவிட்டு மாலையும் கழுத்துமாக எங்கள் வீட்டிற்கு வந்தபோது நாங்கள் அதிர்ந்து போனோம்.

எனினும் வேறு வழியின்றி அவர்களது திருமணத்தை ஏற்றுக் கொண்டோம். இருவரும் மிக அதிகம் படித்தவர்கள். இருவரும் வேலை பார்க்கிறார்கள். இருவரும் வளர்ந்த விதமே வெவ்வேறு விதமானது. ஆகாரப் பழக்கத்தில் இருந்து தெய்வ வழிபாடு வரை அனைத்திலுமே இருவரும் வெவ்வேறு பழக்கத்தோடு வளர்ந்தவர்கள். ஆரம்பத்தில் ஓரிரு மாதங்கள் எல்லாம் சரியாக நடப்பது போல் தெரிந்தது.

ஆனால், நாள் செல்ல செல்ல அவர்களிடையே விரிசல் ஏற்பட ஆரம்பித்தது. இப்பொழுது தினப்படி சண்டை சச்சரவோடுதான் அவர்கள் வாழ்க்கை செல்கிறது. எங்களால் அவர்களைச் சமாதானப்படுத்த முடியவில்லை. எங்களது தலையீட்டையும் அவர்கள் விரும்பவில்லை. எனினும் எங்கள் மகள் உடல் மெலிந்து, வாழ்வில் நம்பிக்கை இழந்து அழுது புலம்புவதை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை சுவாமி. தாங்கள்தான் அருள் புரியவேண்டும் சுவாமி. எங்கள் மகள் வாழ்க்கை சீராக

*வேண்டும் சுவாமி."*

*பெற்றவரின் குரல் தழுதழுத்தது. அவர்கள் சுவாமியின் திருமுகத்தையே ஒருவித எதிர்பார்ப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர்.*

*அங்கு வெகுநேரம் அமைதி நிலவியது. சுவாமி அமைதியாக மாறி மாறி சிகரெட் பிடித்தபடி இருந்தார்.*

*"இப்படிப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப் பட்டு ஏராளமான தாய் தந்தையர் என் தந்தையிடம் முறையிட இங்கு வருகிறார்கள். தாய் தந்தையரின் சொற்களை மீறி நடந்து பிள்ளைகள் சிரமப்படுவதை என்னவென்று சொல்வது? நம்முடைய தலைவர்களே இத்தகைய காரியத்தைச் செய்து தப்பான முன்னுதாரணமாக திகழ்கிறார்களே? என்ன செய்வது? எல்லாம் என் தந்தையின் விருப்பம். நாம் நம் தந்தையிடம் பிரார்த்திப்போம். பிள்ளைகள் மகிழ்வோடு வாழ தந்தை அருள் புரியட்டும்."*

*சுவாமியின் குரலில் ஒருவித சோகம் தொனித்தது.*



# தந்தையின் வீடு

## 14

1982ஆம் ஆண்டு. திருவண்ணாமலையில் தீபத்திருவிழா நடந்து கொண்டிருந்த நேரம். அந்த மூன்று நண்பர்கள் சுவாமியின் தர்பாரை பக்தர் கூட்டத்தின் மத்தியில் அமர்ந்து சுவாமியின் ஆனந்த பரவசத்தைப் பருக வந்திருந்தார்கள். எப்போதும் அந்த நண்பர்களைத் தனித்தே சந்தித்து ஆசி மழை பொழியும் சுவாமி அன்றும் அந்த மூன்று நண்பர்களையும் சந்நிதித் தெரு வீட்டினுள்ளே அழைத்துச் சென்று, மற்ற பக்தர்களுக்கு விடை கொடுத்து அனுப்பி

விட்டார். சுவாமியுடன் தனிமையில் அந்த நண்பர்கள் பேரின்பம் சுவைத்திருந்தனர்.

மூன்று நாட்கள் கடந்தன. நண்பர்களுக்கு பசியின் தாக்கம் அதிகமானது. சுவாமி அங்கிருந்த பழங்கள், தேன், பழச்சாறு எல்லாவற்றையும் கலந்து ஓர் அமுதக் கலவையைச் செய்யச் சொன்னார்.

ஒரு நண்பர் அதை செய்து முடித்து ஒரு காய்ந்த பெரிய மந்தார இலையில் பரிமாறி வைத்தார். கலவையைச் சுற்றி நண்பர்களை அமரச் செய்து, சுவாமியும் அவர்களுடன் அமர்ந்து கொண்டார்.

"நாமனைவரும் நண்பர்கள். நமக்குள் எந்தச் சம்பிரதாயமும் வேண்டாம். நாமனைவரும் ஒரே இலையில் இந்த அமுதைப் புசிக்கலாம்," என சுவாமி உத்திரவிட நண்பர்களும் சுவாமியும் ஒரே இலையில் பழக்கலவையைச் சாப்பிட்டனர்.

மற்றுமொரு நாள், சந்நிதித் தெரு வீட்டில் கூட்டம் அதிகமாக இருந்த சமயம். அதே நண்பர்கள் சுவாமியைத் தரிசிக்கும் பேராவலில் சுவாமியின் சந்நிதித் தெரு வீட்டின் கதவைத் தட்டினர்.

*சுவாமி கதவைத் திறந்தார். நண்பர்களைக் கண்டார். சுவாமியின் முகம் வாடியது.*

*"நண்பர்களே, இந்தப் பிச்சைக்காரன் எப்போதும் உங்களைத் தனியாகச் சந்தித்து உரையாட வேண்டுமென என் தந்தை கூறுகிறார். எனவே இனி எப்போது வந்தாலும் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே தந்தி மூலம் இந்தப் பிச்சைக்காரனுக்குத் தகவல் சொல்லிவிட்டுத் தான் வரவேண்டும். இனி தகவல் சொல்லாமல் வரக்கூடாது," என்று சுவாமி சற்று கடிந்து கூறினார்.*

*நண்பர்கள் சுவாமியை மிகவும் தொந்தரவு செய்கிறோமோ என்று கவலையில் ஆழ்ந்தனர். எனினும், சுவாமி அவர்களோடு மீண்டும் தனிமையில் ஆன்ம சாகரத்தில் மூழ்கித் திளைக்கலானார். மூன்று நாட்கள் சொர்க்க வாசம் செய்து நண்பர்கள் ஊர் திரும்பினர்.*

*சில நாட்கள் கடந்தன. நண்பர்கள் மூவரும் சுவாமியை மீண்டும் தரிசிக்க ஆசை கொண்டனர். ஒரு நண்பர் சுவாமிக்கு தங்களது வருகையைத் தந்தி மூலம் தெரி விப்போம் என்று கூறினார். நண்பரில் ஒருவர்,*

"சுவாமி தான் நமக்குள் சம்பிரதாயங்கள் தேவை இல்லை எனக் கூறியுள்ளாரே. மேலும் சுவாமியைத் தரிசிக்கும் ஆசையே சுவாமியின் பேரருளால் உண்டானது தானே. இதுதவிர தந்தை வீட்டிற்குத் தகவல் சொல்லிச் செல்லத் தேவையே இல்லையே. சுவாமி நமது தந்தை. சந்நிதித் தெரு வீடு நமது தந்தையின் வீடு. எனவே இப்பொழுதே நாம் தந்தை வீடு செல்வோம்," எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

மற்றுமொரு நண்பரோ,"சுவாமி கோபப்பட்டு நீங்கள் சென்று விடுங்கள் எனக் கூறி விட்டால்..."

போகலாம் எனச் சொன்ன நண்பர்,

"சுவாமி அப்படி சொல்லிவிட்டால், தந்தை சொல்லை மீறாது உடனடியாக ஊர் திரும்பிவிடுவோம்," எனச் சாதாரணமாகக் கூறினார்.

நண்பர்களுக்கு உற்சாகம் பீறிட்டது. காரில் இரவோடு இரவாகப் புறப்பட்டனர். அதிகாலை ஐந்து மணிக்கு திருவண்ணாமலை சந்நிதித் தெரு வீட்டை அடைந்தனர். உரிமையுடன் வீட்டின் இரும்புக் கதவைச்



சற்றே ஓசைபடத் தட்டினர். சுவாமி பெரிய மரக் கதவைத் திறந்து வெளியில் வந்தார். இரும்புக் கதவருகே வந்தார். தெரு விளக்கு வெளிச்சத்தில் நண்பர்களை உற்றுப் பார்த்தார். சுவாமியின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் ஓடின.

"உங்கள் வருகை குறித்து தந்தி மூலம் இந்தப் பிச்சைக்காரர் தகவல் சொல்லச் சொல்லி யிருந்தாரே நண்பர்களே..."

நண்பர்களில் ஒருவர் குறுக்கிட்டு, "சுவாமி நாங்கள், தங்களுக்கு தந்தி கொடுத்துச் செல்லலாம் என்றுதான் சொன்னோம். ஆனால், இவர்தான் தந்தை வீட்டிற்குத் தகவல் சொல்லிச் செல்ல வேண்டியதில்லை என்று கூறிவிட்டார் சுவாமி. எனவே தகவல் தெரிவிக்காது வந்து விட்டோம் சுவாமி," எனக் கூற, சுவாமி ஆனந்த மிகுதியில் அற்புத ஓசையில் சிரித்தார்.

இரும்புக் கதவைத் திறந்தார். செய்தி சொல்லத் தேவையில்லை என்று கூறிய நண்பரைக் கைப்பிடித்து வீட்டினுள் அழைத்துச் சென்றார். மற்ற நண்பர்கள் பின் தொடர்ந்தனர். சுவாமி தனது இருக்கையில் அமர்ந்து செய்தி அனுப்ப வேண்டாம்

*எனச் சொன்ன அன்பைரைத் தன்னருகில் அமரவைத்தார்.*

*"தந்தையைப் பார்க்க அனுமதி எதற்கு?"*

*சுவாமி ஆனந்த மிகுதியில வாய்விட்டுச் சிரித்தபடி கூறினார். அங்கே பேரானந்தம் பொங்கி வழிந்தது. அடுத்த சில நாட்கள் அங்கே தெய்வீகத் திருவருள் தாண்டவமாடியது.*



# தீராத விளையாட்டுப் பிள்ளை

## 15

1982இல் திருவண்ணாமலையில் சிவகாசி நாடார் சத்திரத்தில் மூன்று குடும்பங்கள் தங்கியிருந்தன. யோகி ராம்சுரத்குமாரும் அவர்களுடன் சில நாட்களாகத் தங்கி யிருந்தார்.

சுவாமி ஏழாம் எண் அறையிலும் குடும்பத்தார் அதே சத்திரத்தின் முதல் தளத்தில் வெவ்வேறு அறைகளிலும் தங்கியிருந்தனர். எனினும் பெரும்பாலான நேரம் குடும்பத்தார்

சுவாமி இருந்த அறையிலேயே கழித்தனர். அன்று குடும்பத்துப் பெண்கள் யாவரும் ஒருங்கிணைந்து சுவாமி மீது அற்புதமான பாடல் ஒன்றைப் புனைந்திருந்தனர். அப்பாடலை பாரதியாரின் 'தீராத விளையாட்டுப் பிள்ளை' பாடலின் ராகத்தில் அமைத்திருந்தனர்.

பாடல் பயிற்சிகள் முடிந்ததும், அவர்கள் சுவாமியிடம் வந்து அப்பாடலை பாட சுவாமியிடம் அனுமதி கோரினர். சுவாமி அனுமதி அளித்தார். மேலும் அப்பாடலை அவர்கள் பாடும்போது அதை ஒலிநாடாவில் பதிவு செய்யவும் ஆண்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆண்கள் ஒலிப்பதிவுக் கருவியுடன் தயாரா யினர். பெண்கள் பாட ஆரம்பித்தனர். சுவாமியின் கல்யாண குணங்களைப் பற்றி அற்புதமாக அப்பாடல் புனையப்பட்டிருந்தது.

சுவாமியின் தெய்வீகத் தன்மை, சுவாமியின் அருள் கடாட்சம், சுவாமியின் பேரன்பு என பல்வேறு விதங்களாக சுவாமியை வர்ணனை செய்து அப்பெண்கள் பாடினர். சுவாமி அப்பாடலை வெகுவாக ரசித்து மகிழ்ந்தார்.

இதைக் கண்ணுற்ற ஆண்களுக்குத் தாங்களும் பாடல் எழுத வேண்டும் என்ற ஆசை பிறந்தது. சுவாமியிடம் அனுமதி கேட்டனர். சுவாமியும் சம்மதித்தார்.

நண்பர்கள் சற்று நேரத்திலேயே பாடலை அதே ராகத்தில் எழுதி முடித்தனர். சுவாமி முன் பாடலைப் பாட அனுமதி கோரினர். சுவாமி அனுமதித்தார்.

அவர்கள் பாடலையும் ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிநாடாவில் பதிவு செய்யுமாறு சுவாமி நண்பர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஒலிப்பதிவுக் கருவி தயாரானது. நண்பர்கள் பாட ஆரம்பித்தினர். பாடல் வித்தியாசமாக இருந்தது. பாடலில், பரப்பிரம்மமான சுவாமி தன்னை பிச்சைக்காரன் எனச் சொல்லும் பொய்யன் என்றும், பக்தர்களின் இதயங்களை அவர்கள் அறியாமலே திருடும் கள்வன் என்றும், உன்னதமான புனித ஆத்மாவாக இருந்தும் தான் ஒரு அழுக்கடைந்த பாவி எனச் சொல்லும் கபடதாரி என்றும், பலவாறாகச் சுவாமியைச் சாடுவது போல் வர்ணிக்கப்பட்டிருந்தது.

பாடல் முடிந்தது. சுவாமி பெரும் வியப்புடன் நண்பர்களைப் பார்த்தார்.

அந்த இரண்டு பாடல்களையும் ஒலிநாடாவில் மீண்டும் கேட்க சுவாமி விரும்பினார்.

ஒலிநாடா இயக்கப்பட்டது.

இரண்டு பாடல்களும் நன்கு பதிவாகி யிருந்தது. சுவாமி மீண்டும் ஒலிநாடாவை இயக்கச் சொன்னார்.

சுவாமி தனது வலது கரத்தை அந்தக் கருவியின் மேல் வைத்தார். பெண்கள் பாடிய பாடல் ஒலித்து முடிந்தது. சற்றுநேரத்தில் ஆண்கள் பாடும் பாடல் வரவேண்டும். அனைவரும் காத்திருந்தனர். நேரம் கடந்து கொண்டே இருந்தது.

ஆண்கள் பாடிய பாடல் வரவே இல்லை. ஒலிநாடாவும் முடிந்து போய் நின்றுவிட்டது. கருவியில் கோளாறு ஏற்பட்டிருக்குமோ என்று நினைத்து நண்பர்கள் பலமுறை முயன்றும் ஆண்கள் பாடிய பாடல் வரவே இல்லை. அனைவரும் வியப்புடன் சுவாமியைப் பார்த்தனர்.

“என் தந்தை காப்பாற்றிவிட்டார். நண்பா,

*சில விஷயங்களை நமக்குள் பகிர்ந்து கொள்ளலாம். இந்த மாதிரியான சொற்களை பிற நண்பர்கள் கேட்டால் அவர்கள் எதிர்மறையாகப் பாதிக்கப்படுவார்கள். எனவே என் தந்தை அந்தப் பாடலைத் தன்னோடு எடுத்துக் கொண்டார். என் தந்தையின் கருணையினாலேயே அனைத்தும் நடக்கிறது. இனி இது போன்ற பாடல்களை எழுத வேண்டாம் நண்பா."*

*சுவாமியின் எண்ணம் நன்கு புரிந்தது.*

*அந்தப் பாடலை எழுதியிருந்த பேப்பரும் காணாமல் போய்விட்டது.*



# கண்ணாடியில் சுவாமியின் முகம்

# 16

1993ஆம் ஆண்டின் மத்தியில் ஒரு நாள். சுவாமி யோகி ராம்சுரத்குமார் திருவண்ணாமலையில் உள்ள சிவகாசி நாடார் சத்திரத்தில் 9ஆம் எண் அறையில் சில பக்தர்களோடு அமர்ந்திருந்தார். அங்கே ஆனந்தமும் பேரமைதியும் ஒருங்கே நிலவியது.

பக்தருக்கும் பரமனுக்கும் இடையில் மொழி கடந்த உணர்வுப் பரிமாற்றங்கள் நடந்து கொண்டிருந்தன. சுவாமியின் சொரூபமும்,

அரூபமும், சொற்களும், மௌனமும், பிரம்மத்தை ஸ்பஷ்டமாக அங்கே ஸ்தாபனம் செய்து கொண்டிருந்தது.

நேரம் செல்வதே தெரியவில்லை. மதிய நேரம் வந்தது. பக்தர்கள் சுவாமிக்கென உணவு சமைத்து எடுத்து வந்திருந்தனர்.

சுவாமியின் அனுமதி பெற்று சுவாமிக்கு ஆகாரத்தைப் பக்தர்கள் பரிமாறினர். சுவாமிக்கென பக்குவமாகச் செய்யப்பட்ட உணவை சுவாமி ரசித்து அருந்தினார்.

உணவு உட்கொண்ட பின் சுவாமி கையைக் கழுவுவதற்காக சத்திரத்தின் பின்புறத்தில் உள்ள கைகழுவும் இடத்திற்குச் சென்றார். உடன் சென்ற ஒரு பக்தர் சுவாமி கை கழுவிய பின் கையைத் துடைத்துக் கொள்ள ஒரு துண்டையும் எடுத்துச் சென்றார்.

நாடார் சத்திரத்தில் அப்போது சில மாறுதல்கள் நடந்து கொண்டிருந்தன. கை கழுவும் பேசினுக்கு மேலே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி புதிதாக மாட்டப்பட்டிருந்தது.

சுவாமி கையைக் கழுவிய பின் தற்செயலாக நிமிர்ந்தபோது கண்ணாடியில் சுவாமியின்



*பிம்பம் தெரிந்தது. பிம்பத்தைப் பார்த்த சுவாமியின் முகத்தில் ஒரு வகை நாணம் கலந்த சிரிப்பு மலர்ந்தது.*

*"சுமார் நாற்பது வருடங்களுக்குப் பின் இந்தப் பிச்சைக்காரன் அவன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கிறான்."*

*சுவாமி மெதுவாகச் சொன்ன சொற்கள் பக்கத்திலிருந்த பக்தரின் காதில் தெளிவாகக் கேட்டது.*

*பக்தர் பிரமித்து நின்றார். சரீரம் கடந்து உலவும் அந்தப் பெருமானை இருகரம் கூப்பி வணங்கினார்.*

## பின்குறிப்பு:

*1953இல், குஜராத் மாநிலத்தில் உள்ள பவநகரில் இருக்கும், சுவாமி ராம்தாஸ் ஆசிரமத்தில் சுவாமி ராமதாஸின் விருப்பப்படி, சில பக்தர்கள் சுவாமி யோகி ராம்சுரத்குமாரை முடி திருத்தும் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவருடைய தலைமுடியைச் சீர் செய்யவைத்து, முகச்சவரமும் செய்யவைத்து, அவரை நீராட்டி, புத்தாடை அணிவித்து சுவாமி ராமதாசர் முன் நிறுத்தினர்.*

*சுவாமி ராம்தாஸ், நமது சுவாமியின் புதிய ரூபத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தார். அந்தச் சமயத்தில் முடித்திருத்தும் நிலையத்தில் சுவாமி தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்ததே கடைசி முறையாக இருக்கும் என எண்ணுகிறேன்.*



# நாம ரசம்

## 17

"இவரை கார் ஓட்டுவதற்கு ஏன் அனுமதித்தீர்கள்?"

சுவாமி யோகி ராம்சுரத்குமார், அந்த இரண்டு நண்பர்களில் ஒருவரிடம் ஆதங்கத்துடன் கேட்டார்.

"என் பேச்சை அவர் சிறிதும் கேட்கவில்லை சுவாமி. சிறிது அதட்டிக் கேட்டால் மிகவும் கோபப்பட்டார் சுவாமி. எனவே உங்கள் நாமத்தைச் சொல்லிக்கொண்டே அமைதியாக இருந்துவிட்டேன் சுவாமி."

மது போதையில் வந்த அன்பரோடு வந்த நண்பர் புலம்பினார்.

சுவாமி நண்பர்களையும், அவர்கள் வந்த காரையும் மாறி மாறி பார்த்தவண்ணம் இருந்தார். இரவு நடுநிசி அப்போது. கார் சந்நிதித் தெரு வீட்டின் எதிரில் ஏடாகூடமாக நிறுத்தப்பட்டிருந்தது.

சுவாமி காரைச் சரியாக தெருவின் ஓரத்தில் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் நிறுத்தச் சொன்னார். போதையில் இருந்தவரிடமிருந்து கார் சாவியை ப் பறித்து தெளிவாக இருந்த நண்பர் காரை யாருக்கும் தொந்தரவு இல்லாமல் தெரு ஓரமாக நிறுத்தினார்.

போதையில் இருந்த அன்பரை சுவாமி தன் கைப்பிடியில் உறுதியாகப் பற்றி சந்நிதித் தெரு வீட்டினுள் அழைத்துச் சென்றார். உடன் வந்த நண்பரும் சுவாமியைப் பின்தொடர்ந்து வீட்டிற்குள் வந்தார்.

போதையில் இருந்த நண்பரை சுவாமி தன்னருகே அமர்த்திக் கொண்டார். உடன் வந்த அன்பரை தன் எதிரில் அமர வைத்தார்.

போதையில் இருந்த நண்பர் திடீரென விம்மி விம்மி அழ ஆரம்பித்தார்.

பெரிய செல்வந்தரான அந்த அன்பர் சுவாமியைத் தெய்வமாக பாவிப்பவர். செல்வ செழிப்பில் வாழும் சில சாதாரண ஜீவன்களைப்போல இவரும் பலவித மயக்கங்களில் வாழ்ந்து பழகியவர்.

எனினும் குருவின் அருமை அறிந்தவர். குருவைத் தேடி அலைந்து முடிவில் சுவாமியின் திருவடியில் சரணாகதி அடைந்தவர். சுவாமியின் அருளைப் பரிபூர்ணமாகப் பெற்றவராக இருந்தும் வெகு நாளைய பழக்க வழக்கங்களிலிருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்.

அன்று மாலை விரக்தியின் உச்சத்தில் மதுபானத்தை அளவுக்கு அதிகமாக அருந்திவிட்டு தன் நண்பரை வற்புறுத்தி தன்னோடு அழைத்துக்கொண்டு வெகு தூரத்தில் உள்ள திருவண்ணாமலை நோக்கி பயணம் செய்தார். சாலையில் கார் தாறு மாறாக ஓடியது. உடன் வந்த நண்பரிடமும் காரைக் கொடுக்க போதை அன்பர் மறுத்தார். எப்படியோ இருவரும் பத்திரமாக சுவாமி யிடம் வந்து சேர்ந்தனர்.

சுவாமி, போதை அன்பரின் முதுகை வாஞ் சையுடன் தடவிக் கொடுத்தார். அன்பரின்

*விம்மலும் அழுகையும் அதிகமானது. சுவாமி அவரது கரத்தைத் தன் கரத்தில் இதமாகப் பிடித்து வருடினார். அன்பரின் அழுகை மிகுந்த ஓசையுடன் வெளிப்பட்டது. அவரின் போதை தெளிந்தது.*

*"சுவாமி இதிலிருந்து என்னை விடுவிக்க மாட்டீர்களா?" அன்பர் மிகுந்த தாபத்துடன் சுவாமியிடம் கேட்டார்.*

*"நண்பா, இனி இந்த லாகிரி வஸ்துக்கள் நம்மைப் பீடிக்காது. இந்தப் போதை பானங்கள் இனி நம்மை விட்டுச் சென்றுவிடும். என் தந்தையின் நாமரசம் தரும் பக்தி மயக்கமே இனி எப்போதும் நம்முடன் இருக்கப் போகிறது. கவலை வேண்டாம் நண்பா. நாம் நம் தந்தையை மட்டும் நினைத்திருந்து வாழ்ந்திருப்போம்."*

*சுவாமியின் அருட்சொற்கள் அந்த விந்தையைச் செய்தது. அந்த அன்பர் போதைப் பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்டார். சுவாமியின் திருவடியில் சரணாகதி அடைந்தார். வாழ்வின் உன்னத நிலையான தெய்வசாட்சாத்காரத்தை முழுமையாக அடைந்தார்.*



# எனது யோகி ராம்சுரத்குமார்

## 18

**அ**ந்த அதிதீவிர பக்தரின் மனோநிலை சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் ஸ்மரணத்தில் மட்டுமே எப்போதும் நிறைந்திருந்தது.

பெரிய பெரிய தொழில் நிறுவனங்களைத் தலைமையேற்று நடத்தி வந்தாலும், அவரின் நாடி, நரம்புகள் அனைத்தும் சுவாமியின் நினைவாலேயே நிரம்பித் துடித்த வண்ணம் இருந்தது. நினைத்தபோது சுவாமியிடம் வந்துவிடுவார். அவருக்காகவே சுவாமியின் இதயமும், சந்நிதித் தெரு வீட்டின் கதவும் விசாலமாகத் திறந்தே இருக்கும்.

உரிமையுடன் அவர் சுவாமியின் வீட்டிற்குள் செல்வார். அங்கே பக்தனும் பரமனும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி மகிழ்வார்கள்.

அங்கே பக்தியும், பரவசமும் அதன் விளைவான பேரானந்தமும் பெருங்கடலாகப் பொங்கிப் பொங்கிக் கூத்தாடும்.

அன்று அந்த பக்தர் சுவாமியின் மீது பாடலொன்றை எழுதி வந்திருந்தார். சுவாமியிடம் பாடலைப் பற்றிக் கூறினார். சுவாமி பாடலைப் பாடச் சொன்னார்.

எந்தவித பாடல் இலக்கணத்திலும் அடங்காத அப்பாடலை அந்த பக்தர் தன் சுருதியற்ற கரகரத்த குரலில் பாவப்பூர்வமாகப் பாடினார்.

சுவாமி தனை மறந்து தப்புத் தாளத்துடன் மிகவும் ரசித்துக் கொண்டிருந்தார். மீண்டும் மீண்டும் அப்பாடலை சுவாமி பக்தரைப் பாட வைத்தார். பாடலின் பொருளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் சொல்லிக் கேட்டார்.


பாடலின் முதல் வரி "எனது யோகி ராம்சுரத்குமார்" என ஆரம்பித்திருந்தது.

*சுவாமியின் கண்களில் கங்கை பெருக்கெடுத்தது.*

*"நீ எனது யோகி ராம்சுரத்குமார் என எழுதினாய். இனி நான் எனது (நண்பரின் பெயரைச் சொல்லி) நண்பனே என்றுதான் அழைப்பேன். நீ என்னிலும் நான் உன்னிலும் கலந்து விட்டோம். என் தந்தை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இந்தப் பிச்சைக்காரன் பெயர் இந்த ஜகத்தில் இருக்கும்வரை உனது பெயரும் என்றென்றும் இந்த பிச்சைக்காரன் பெயரோடு நிலைத்திருக்கும்."*

*சுவாமி தழுதழுத்த குரலில் பேரானந்தத்தோடு கூறினார். பக்தர் சுவாமியின் திருவடியில் நமஸ்கரித்தார்.*

*சில மாதங்களில் பக்தர் சுவாமியின் திருவடியில் அமைதியான ஆனந்தத்தோடு வலியறியாமல் கரைந்து போனார்.*



# அம்மா வேண்டாம், அம்மா சொத்து வேணும்

# 19

சுவாமி யோகி ராம்சுரத்குமார் சந்நிதித் தெரு வீட்டில் அமர்ந்திருந்தார். எதிரே ஒரு மத்திய வயதுத் தம்பதியரும் அவர்களது மகனும், மகளும் அமர்ந்திருந்தனர்.

மெத்தப் படித்த அந்த மனிதர் பவ்வியமாக சுவாமியை நமஸ்கரித்தவாறு அமர்ந்திருந்தார். நெற்றியில் விபூதிப் பட்டை அவரைப் பக்திமான் எனப் பறைசாற்றுவதுபோல் இருந்தது. அவரது வினயம் சுவாமியை

அவர் மிக நன்கு அறிந்தவர் எனக் கூறுவது போலிருந்தது. அவர் வீட்டினுள் பக்திப் பரவசமாக நுழைந்து சுவாமியை நமஸ்கரிக்கும் போது பார்ப்பதற்கு வித்தியாசமாகப் பட்டது.

சுவாமி வெகு நேரம் அமைதியாக இருந்தார். வந்தவர்களை சுவாமி பொருட்படுத்தவில்லை. மாறி மாறி ஒன்றன் பின் ஒன்றாகச் சிகரெட் பிடித்தவண்ணம் இருந்தார். வந்தவர் கை கூப்பிய வண்ணம் அமர்ந்திருந்தார்.

"அம்மா எப்படி இருக்கார் தம்பி?" சுவாமி வினவினார்.

"அம்மா தம்பி வீட்டில் இருக்கிறா சுவாமி." வந்தவர் பதிலுரைத்தார். நேரம் கரைந்தது.

"அம்மா என்னை ஏமாற்றி விட்டா சுவாமி." வந்தவர் குரலில் கோபம் கொப்பளித்தது. சுவாமியின் வதனம் இறுக்கமடைந்தது.

"என் அம்மா தன் பெயரில் உள்ள வீட்டை என் தம்பிக்கே எழுதிக் கொடுத்துவிட்டார் சுவாமி."

வந்தவர் முகம் கோபத்தில் விகாரமானது. சுவாமி அமைதியாக சிகரெட் பிடித்தவாறு இருந்தார்.



*"அம்மாவை எப்போது பார்த்தீங்களா தம்பி?"*

*"ரொம்ப நாள் ஆயிடுச்சி சுவாமி."*

*"அம்மா உங்க வீட்டுக்கு வருவாரா?"*

*"அவ வரமாட்டா சுவாமி. அவ ஏன் வரணும்? சொத்தைப் பூரா தம்பிக்கு கொடுத்துவிட்டு என் வீட்டுக்கு எப்படி வருவா சுவாமி?"*

*"நீங்க அம்மாவை உங்க வீட்டுக்கு வரச்சொல்லி கூப்பிட்டீங்களா?"*

*"நான் ஏன் கூப்பிடனும் சுவாமி? அவளுக்குத் தம்பியைத் தான் மிகவும் பிடிக்கும். அங்கதான் இருப்பா சுவாமி."*

*"அம்மாவிற்கு ஏதாவது பண உதவி செய்வீர்களா?"*

*"நான் ஏன் செய்யணும் சுவாமி. அவதான் எனக்கு ஒன்றும் கொடுக்கவில்லையே?"*

*"அம்மா சுகமாக இருக்காரா?"*

*"எனக்குத் தெரியாது சுவாமி."*

*"உங்க மனைவி, குழந்தைகள் அம்மாவோட பேசுவாங்களா?"*

"என் மனைவிக்கும் அம்மாவிற்கும் ஆகாது சுவாமி. பேச்சு வார்த்தையே கிடையாது சுவாமி."

"தம்பி வசதியா இருக்காரா?"

"அவன் ஒரு படிக்காதவன் சுவாமி. ஏதோ சின்னதா ஒரு கடை வைச்சு பிழைச்சிக்கிட்டு இருக்கான் சுவாமி."

"தம்பிக்காவது ஏதாவது உதவி பண்ணுவீங்களா?"

"நான் ஏன் பண்ணனும் சுவாமி? அவன்தான் அம்மாவை ஏமாற்றி வீட்டைத் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டானே."


சுவாமி பேச்சை முடித்துக் கொண்டார். அங்கிருந்த வாழைப் பழங்களை அவர்களுக்கு கொடுத்து அனுப்பி வைத்தார். வந்தவர்களும் சுவாமியின் அருள் கிடைத்து விட்டதாக எண்ணி ஒருவித மமதையில் சென்றனர்.

"அம்மா வேண்டாம். அம்மா சொத்து வேணும். தூத்தேறி."

சுவாமி மாறி மாறி இவ்விதமே வெகு நேரம் கூறினார். சுவாமி சாந்தியடைய வெகு நேரம் ஆனது.

*சில நாட்களில் அந்த மெத்தப் படித்தவரின் மொத்தக் குடும்பமும் ஒரு சாலை விபத்தில் அகால மரணமடைந்தனர். மரணச் செய்தி கேட்டுத் தாயும் இறந்து போனார் என்று செய்தி வந்தது.*

❀



# தந்தையின் பணியைத்தான் செய்கிறோம்

## 20

"**சு**வாமி, நீங்கள் ஜே.கிருஷ்ணமூர்த்தியுடன் பேசியிருக்கிறீர்களா?"

ஒரு அன்பர் சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் ஆர்வத்துடன் கேட்டார்.

சுவாமி பழைய நினைவுகளில் கரைந்தார். அடுத்தடுத்து புகை பிடித்தவாறு இருந்தார். சிறிது நேரம் கடந்தது.

"இந்த பிச்சைக்காரன் கிருஷ்ணாஜியை



சென்னையில், ரிஷிவேலியில், மும்பேயில், காசியில் பார்த்திருக்கிறார். அவருடைய சொற்பொழிவையும் கேட்டிருக்கிறார். சென்னையில், வசந்த விஹாரில் இந்தப் பிச்சைக்காரன் கிருஷ்ணாஜியின் சொற் பொழிவைக் கேட்டுவிட்டு ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தான். அவ்வழியே வந்த கிருஷ்ணாஜி நேராக இந்தப் பிச்சைக்காரனிடம் சிரித்தபடி வந்தார். வந்தவர் இந்தப் பிச்சைக்காரன் முதுகில் தட்டிவிட்டுச் சென்றார். இந்தப் பிச்சைக்காரன் அப்போதே தூங்கிப் போய்விட்டான்."

*சுவாமி மீண்டும் ஆழ்ந்த மௌனத்தில் புகை பிடித்தபடி இருந்தார். நேரம் கடந்தது. சுவாமியின் முகம் சுடராகி ஜொலித்தது.*

*"இந்தப் பிச்சைக்காரன் கிருஷ்ணாஜியை அறிவான். கிருஷ்ணாஜி இந்தப் பிச்சைக்கா ரனை அறிவார். அவ்வளவுதான். ஒருவருடன் ஒருவர் பேசியதில்லை. இந்தப் பிச்சைக்காரர் எங்கே, கிருஷ்ணாஜி எங்கே? நண்பா, நீ அறிவாயா, என் தந்தை கிருஷ்ணாஜியை மாளிகையில் வைத்திருந்தார். இந்தப் பிச்சைக் காரனை என் தந்தை புழுதியில் எறிந்து விட்டார். எனினும் ஒன்றை நினைவில் கொள் நண்பா, நாங்கள் இருவரும் என் தந்தையின் ஒரே பணியைத்தான் செய்து வருகிறோம்."*

*சுவாமியின் தேகம் தெய்வீகத்தில் ஜொலித்தது.*



# உண்மை அறிவோம்

## 21

**சி**வனணைந்த பெருமாள் என்னிடம் நேரிடையாகச் சொன்ன இரண்டு சம்பவங்கள் உண்டு.

சுவாமி யோகி ராம்சுரத்குமாரும், பெருமாளும், திருக்கோவிலூரில், தென்பெண்ணை ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தனர். சுவாமி சில மாதங்களுக்கு ஒரு முறையே நீராடுவது வழக்கம்.

அன்று, ரகோத்தம சுவாமிகளின் பிருந்தாவனத் தின் பின்புறம் அகன்று ஓடிக்கொண்டிருந்த

*தென்பெண்ணை ஆற்றில் இருகரை தொட்டு வெள்ளம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.*

*பல சிறுவர்களும், இளைஞர்களும் ஆற்றில் நீராடிக் களித்துக் கொண்டிருந்தனர். தென்பெண்ணை ஆற்றின் அந்தப் பகுதியில் ஆழம் அதிகம் இருக்காது. ஆனால் சிறிய, பெரிய பாறைகள் ஆற்றில் புதைந்திருக்கும்.*

*சுவாமியும், பெருமாளும் நீராடிக் கொண்டிருந்த சமயம், பக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த சிறுவன் பெரும் கூச்சலிட்டான். அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சி அடைந்து அச்சிறுவனை நோக்கிச் சென்றனர்.*

*சிறுவனின் ஒரு கால் இரண்டு சிறிய பாறைகளின் இடுக்கில் மாட்டிக்கொண்டு வெளியே எடுக்க முடியாது பயத்தில் அலறிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. சிறுவனின் காலை விடுவிக்க பலரும் முயன்றனர். ஆனால், அவர்களால் முடிய வில்லை.*

*மிகுந்த ஆழம்மிகுந்த கங்கையிலேயே அனா யாசமாக நீந்தி விளையாடும் சுவாமி, அந்த இடுப்பளவு நீரில் மூழ்கி பாறை இடுக்கில் மாட்டிக் கொண்டிருந்த சிறுவனின் காலை லாகவமாக விடுவித்து ஆற்றின் பாதுகாப்பான*

பகுதியில் சிறுவனை விட்டுவிட்டு மீண்டும் ஆற்றில் நீராடி மகிழ்ந்தார்.

திடகாத்திர உடல்வாகும், கங்கை மாதா அளித்த நீச்சல் பயிற்சியும் சிறுவனின் காலையும், பயத்தையும் விடுவித்தது. சுவாமியின் விசிறியாலோ, அன்றி சுவாமியின் அமானுஷ்ய சக்தியாலோ பாறை வெடித்து சுக்கு நூறாகி சிறுவன் விடுவிக்கப்படவில்லை. அப்படி பாறை வெடித்திருந்தால் சிறுவனின் கால் என்னவாயிருக்கும்?

மேலும் இந்த சம்பவத்திற்கும் ஞானானந்தகிரி சுவாமிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

## இரண்டாவது நிகழ்வு.

சுவாமி புன்னை மரத்தடியில் இருந்து தேரடி மண்டபத்திற்கு காந்திநகர் வழியாகத் தன் பரிவாரங்களுடன் தினமும் மாலையில் நடந்து வருவார். அவர் வரும் வழியில் சுற்றுச் சுவர் இல்லாத ஒரு பெரிய கிணறு இருந்தது. அன்று சுவாமி வரும் வழியில் அந்த கிணற்றைச் சுற்றி பெருங்கூட்டம் நின்றிருந்தது. சுவாமி பெருமாளை அனுப்பி அங்கே என்ன நடக்கிறது என பார்த்து வரச் சொன்னார்.

பெருமாள் கிணற்றில் ஒரு குதிரை தவறி விழுந்து விட்டதாகவும், சில அனுபவஸ்தர்கள் அதைக் கயிறு கட்டி மீட்க முயன்று கொண்டிருப்பதாகவும் கூறினார். குதிரையை மீட்க முயன்றவர்கள் அதன் வயிற்றுப் பகுதியில் கயிறைக் கட்டி கிணற்றின் இருபக்கத்திலிருந்தும் இழுத்து குதிரையை மேலே கொண்டுவர முயன்றனர்.

ஆனால் ஒவ்வொரு முறையும் குதிரை மிரண்டு போய் கயிற்றில் இருந்து நழுவி மீண்டும் கிணற்றில் விழுந்தது. இவ்வாறு பலமுறை நடந்தது.

விவரம் தெரிந்துகொண்ட சுவாமி கிணற்றின் அருகில் சென்றார். குதிரையை சற்று நேரம் உற்று நோக்கினார். குதிரை பயம் நீங்கி அமைதியானது. அதன்பின் மக்கள் அந்தக் குதிரையை சுலபமாக மீட்டனர்.

சுவாமி தன் மந்திர சக்தியால் குதிரையை நோக்க, அச்சக்தியின் தாக்கத்தால் குதிரை தானாக எவர் உதவியும் இன்றி காற்றில் மிதந்து மேலெழும்பி கரை சேர்ந்தது என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை.



# உடலைப் பேணும் உணவு

## 22

**சு**வாமி யோகி ராம்சுரத்குமார் ஆன்மிகம், லௌகீகம் என எதையும் பிரித்துப் பார்ப்பதே இல்லை. அவர் தன் தந்தையான இறைவனை மட்டுமே எங்கும், எதிலும், எப்போதும் எந்தவிதமான பேதமுமின்றிக் கண்டு பேரின்பத்தோடு, தந்தையுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தார்.

சுவாமி, உணவை எவரும் உதாசீனப்படுத்து வதை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளமாட்டார். அவர் சாப்பிட்ட இலையில் எந்தப் பதார்த்தமும், சிறிது கூட சிதறியோ,

மீதமோ இருக்காது. சுவாமி சாப்பிட்ட இலை, பயன்படுத்தப்பட்ட இலை போன்றே தெரியாது. அவ்வளவு சுத்தமாக இருக்கும்.

ஒரு சமயம் நானும், சுவாமியும் உணவருந்த அடுத்தடுத்து அமர்ந்திருந்தோம். ஒரு அன்பான பக்தை உணவு பரிமாறினார். உணவில் கறிவேப்பிலையும், பச்சைமிளகாய் துண்டங்களும் ஏராளமாக இருந்தன. அதை எல்லாம் இலையின் ஓரத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

சுவாமி என்னையும், இலையையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

"கறிவேப்பிலையையும், மிளகாயையும் சாப்பிடமாட்டீர்களா?" சுவாமி வினவினார். நான் அவற்றை சாப்பிடுவதில்லை என பதிலுரைத்தேன்.

"ரமண மஹரிஷி தன் ஆசிரமத்தில் பக்தர்கள் கறிவேப்பிலையையும், மிளகாயையும் ஒதுக்கி வைப்பதைப் பார்த்து சமயலறைத் தொண்டர்களிடம் கறிவேப்பிலையையும், மிளகாயையும் அரைத்துக் குழம்புடன் சேர்க்கக் கூறினார்."

இவ்விதம் கூறி தன் இலையிலிருந்த


கறிவேப்பிலையையும், மிளகாயையும் என் இலையில் சுவாமி வைத்தார். நான் அவற்றைக் கஷ்டப்பட்டு சாப்பிட்டு முடித்தேன்.

மற்றொரு சமயம் நாங்கள் எங்கள் குடும்பத்துடன் சுவாமியிடம் சென்றிருந்தோம். நாங்கள் சுமார் பத்து பேர் இருந்தோம். சுவாமி எங்கள் மதிய உணவிற்காக உணவு விடுதியில் இருந்து ஆகாரம் வாங்கி வரச் சொன்னார். நாங்கள் வாங்கி வந்தோம்.

குடும்பத்தினர் அனைவரும் வரிசையில் அமர்ந்தனர். நானும், மற்றொரு சகோதரியும் சுவாமிக்கும் மற்றவர்களுக்கும் ஆகாரத்தைப் பரிமாறினோம். எல்லோரும், பரிமாறிய வர்களும் சேர்த்து சாப்பிட்டு முடித்தோம்.

சுவாமி தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்தார். உணவு வந்த பாத்திரங்களைப் பார்வையிட்டார். சாதமும், காயும் தவிர மற்றவை அனைத்தும் நிறைய மீதமிருந்தன. சுவாமி முகம் வாடியது.

"பார்த்தசாரதி, இந்த உணவு விடுதியின் பாத்திரங்கள் யாவற்றையும் சுத்தமாகக் கழுவித்தான் திருப்பிக் கொடுக்க வேண்டும்." சுவாமி உத்திரவிட்டார்.



"சுவாமி ஆகாரம் சற்று மிச்சமாக இருக்கிறதே? என்ன செய்வது சுவாமி."

சுவாமி கோபத்துடன் பார்த்தார்.

"உணவை வீணடிக்கக் கூடாது. பாத்திரங் களைப் கழுவித் தான் விடுதியில் கொடுக்க வேண்டும்."

சுவாமியின் குரலில் கண்டிப்பு தெரிந்தது. நானும் மற்ற இரு பெண்களும், அரை வாளிச் சாம்பாரையும், முக்கால் வாளி ரசத்தையும் மிகுந்த கஷ்டப்பட்டு குடித்து முடித்தோம்.

"என் தந்தை உறைகின்ற இந்த உடலைப் பேணும் உணவை உதாசீனப்படுத்தலாமா?"

சுவாமியின் குரல் தழுதழுத்தது.



# குருவின் கடாட்சம்

## 23

அவன் தன் மனைவிக்குத் துரோகம் இழைத்தவன். சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் அருட் கடாட்சத்தால், அவன் நம்பிய அந்த மாது, அவனுக்குத் துரோகம் இழைத்துச் சென்றுவிட, மனம் திருந்தி மீண்டும் மனைவியோடு வாழ வந்தவன்.

இந்த நடைமுறையில் மிகுந்த பணத்தையும் இழந்து கடனாளி ஆனவன். சுவாமியின் அருளால் கடன் பிரச்சனை நீதிமன்றம் வா யிலாகத் தீர்த்து வைக்கப்பட்டது. சுவாமியின் அருளால் அவன் உழைத்து சம்பாதித்து

குடும்பம் நடத்தினான். சுவாமியின் மீது அபார பக்தியும், நம்பிக்கையும் கொண்டவனாக மாறினான். அவனில் ஏற்பட்ட மாற்றங்கள் அவன் மனைவியைப் பூரணமாகச் சென்றடையவில்லை. ஏதோ ஒருவித வெறுப்புணர்ச்சியை தன் மனைவி மீது தொடர்ந்து அவன் காட்டிக் கொண்டிருந்தான்.

எல்லோர் முன்னிலையிலும் தான் மாற்றம் பெற்றுவிட்டதாக நடித்துக் கொண்டிருந்தான்.

ஒரு சமயம் அவன் தன் நண்பர்களின் குடும்பத்தோடு மனைவியையும் அழைத்துக் கொண்டு சுவாமியிடம் சென்றான். அனைவரும் ஒரு விடுதியில் தங்கினர். சுவாமியும் அவர்களோடு விடுதிக்கு வந்து தங்கினார். சில நாட்கள் சுவாமியின் சந்நி தியில் அனைவரும் பேரானந்தம் துய்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று யாரோ முக்கிய பிரமுகர் சுவாமியைச் சந்திக்க சந்நிதித் தெரு வீட்டில் காத்திருப்பதாகத் தகவல் வந்தது. அவரைக் காண்பதற்காக சுவாமி அவனுடன் வந்த மற்ற இரு நண்பர்களையும் அழைத்துச் சென்றார். அவனை நண்பர்களின்



*குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு சுவாமி அவனிடம் சொல்லிச் சென்றார்.*

*வெகு நேரம் சென்றது. சுவாமி வரவில்லை. நண்பர்களின் குடும்பத்திற்கு அவன் ஆகாரம் வாங்கிக் கொடுத்து சாப்பிட வைத்தான். ஒரு நண்பரின் தாயார் அவனையும் சாப்பிட அழைத்தார். அவன் சுவாமி வந்தபின் சாப்பிடுவதாகச் சொன்னான். மதியம் மூன்று மணி ஆயிற்று. சுவாமி வரவில்லை.*

*சுமார் நான்கு மணியளவில் சுவாமி வந்தார். அனைவரும் உணவு சாப்பிட்டார்களா என சுவாமி வினவினார்.*

*அந்தத் தாயார் அவனைத் தவிர்த்து மற்ற யாவரும் உணவைச் சாப்பிட்டார்கள் என்றும் அவன் ஒருவன் மட்டும் சுவாமியின் மேல் கொண்ட அபார பக்தியால் சுவாமி வந்த பிறகு உணவு சாப்பிடுவதாகச் சொல்லிவிட்டார் என்றும் கூறினார்.*

*"என்னா பக்தியம்மா? தன் மனைவியை நேசிக்கத் தெரியாதவன் என் தந்தை மீது எப்படியம்மா பக்தி கொள்ளமுடியும்?"*

*சுவாமியின் வார்த்தைகள் அவனைச் சாட்டையால் அடித்தது போல் இருந்தது.*

மிகவும் வலித்தது. அதன்பின் அவன் மாறினான். தவறுவது மனித இயல்பு. திருத்துவது குருவின் கடாட்சம். திருந்த மறுப்பது மிருக இயல்பு. அங்கு எவ்வளவு வேடம் திறமையாகப் புனைந்தாலும், குரு அறிவார் அவர் எங்கிருக்கிறார் என்று.

குரு காத்திருப்பார். அத்தகையோர் மாறுதல் அடைவதற்காக யுகயுகமாக குருநாதர் காத்துக் கொண்டிருக்கிறார்.



# அடியாரை கரைசேர்க்கும் சுவாமியின் கோபம்

# 24

சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் கோபத்தின் வெளிப்பாடுகள் சிலவற்றை இன்று பார்ப்போம்.

சுவாமி பக்தர்களுடன் சந்நிதித் தெரு வீட்டில் பரவசத்தோடு குருமஹிமையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். அப்போது, குடியில் முழுபோதையில் தடுமாறிய வண்ணம் ஒரு குடிகார பக்தர் சுவாமியை மீண்டும் மீண்டும் வீட்டின் எதிரே உள்ள சாலையில்

இருந்தவாறு பலத்த குரலில் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார்.

அவரின் கூச்சல் சுவாமிக்கு பெருந் தொந்தரவாக இருந்தது. சுவாமி வீட்டினுள் இருந்து அந்தக் குடிகார பக்தனை நோக்கிக் கடுங்கோபத்தில் பாய்ந்து செல்ல, குடிகாரன் பயந்து சாலை ஓரத்தில் ஒதுங்க, அங்கே யாரும் எதிர்பாராத ஒரு நிகழ்வு நடந்தது. சுவாமி குடிகாரனின் காலைத் தொட்டு நமஸ்கரித்து வணங்க, குடிகாரன் அங்கிருந்து ஓடியே சென்று காணாமல் போனான்.

சுவாமியின் அன்பைப் பரிபூர்ணமாகப் பெற்றதாகக் கூறப்படும் பெண்மணி ஒருவர், சுவாமியின் தெய்வீகப் பணியில் தொடர்ந்து குழந்தைத்தனமான இடையூறுகளைச் செய்தபோது, சுவாமி கடுங்கோபத்தில் அவரைக் கன்னத்தில் பளாரென பொறி கலங்க அடித்த அந்தத் தருணத்தில் சுவாமிக்கு இவ்வளவு கோபம் வருமா என்று அங்கிருந்த அனைவரும் விழி பிதுங்கி திகைத்து நின்றனர்.

மற்றொரு சமயம், சுவாமியிடம் சமய சந்தர்ப்பம் தெரியாமல் அடிக்கடிப் பேசி, சுவாமியைத் தொந்தரவு செய்த பக்தரை ஒரே ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டுத்,



தன் திருநயனங்களைப் பரவசத்துடன் மூடிக்கொண்டு அன்று முழுவதும் பேரமைதி காத்த அந்தப் பெருமானின் தெய்வீகச் சாந்த முகம் இன்றும் கண்களில் தெரிகிறது.


மற்றொரு முறை தன் மனைவியைச்

*சித்திரவதை செய்து அவர் தற்கொலை செய்துகொள்ளக் காரணமான கணவனையும் அவரின் பெற்றோரையும் சுவாமி வசை பாடியது திகிலூட்டுவதாக இருந்தது.*

*"நீங்கள் சில பணம் படைத்தவர்களின் உதவியினால் இங்குள்ள நீதிமன்றத்தில் இருந்து தப்பிவிடலாம். ஆனால் என் தந்தையின் தர்பாரில் நீங்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவீர்கள். இந்தப் பிச்சைக்காரன் சொல்கிறான் உங்களுக்கு நரகம் நிச்சயம் என்று. இங்கிருந்து உடனே சென்று விடுங்கள்."*

*சுவாமியின் குரலில் கோபக் கனல் கொப்பளித்தது. சுவாமி சாந்தியடைய வெகு நேரம் ஆனது.*

*கோபத்தைப் பல பரிணாமங்களில், பக்தருக்குப் பயனுறுமாறு பார்வையால், கரத்தின் வலிமையால், தேர்ந்த சொல்லால், மற்றவரை வெட்கப்பட வைக்கும் பெரும் பணிவால், அடியாரைக் கரை சேர்க்கும் எம்பெருமானை என்றும் தொழுதிருப்போமாக.*



# சுவாமியின் பார்வையில் அன்பர்கள்

## 25

*சுவாமி யோகி ராம்சுரத்குமார் தன் அத்யந்த பக்தர்களை எப்படியெல்லாம் கூறி நினைவுகூர்ந்தார் என்று தெரியுமா நண்பர்களே?*

*"இந்தப் பிச்சைக்காரனை ஓரளவாவது உணர்ந்தவர் இவர் ஒருவரே" என்று தெ.பொ. மீனாட்சிசுந்தரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.*

*"எனது உள்ளம் எனும் சாம்ராஜ்ஜியத்தை*

ஆள்பவர்" என முருகேசனைப் குறிப்பிட்டார். முருகேசன் மறைவிற்குப் பின், "அவர் என் தந்தையுடன் இரண்டறக் கலந்து விட்டார். அவர் வழிபடத் தகுந்தவர்," என சுவாமி நெஞ்சுருகிக் கூறினார்.

"ஏசுபிரான் அவதரித்ததை அறிந்து அவரைத் தரிசிக்க வந்த மூன்று ஞானிகளைப் (கீவீஊமீ ஸ்ரீமீஸீ) போன்றோர் இவர்கள் மூவரும்," என அந்த மூன்று நண்பர்களைக் குறித்து சுவாமி கூறினார்.

"இவர் விடுதலை அடைந்தவர். முக்தி பெற்றவர். என் தந்தை இவரோடு எப்பொழுதும் இருக்கிறார்," என ஒரு பக்தரைக் குறித்துக் கூறி சுவாமி மனமகிழ்ந்திருந்தார்.

"நீங்கள் சௌபாக்கியவதி அம்மா. என் தந்தை உங்கள் பக்தியினால் மிகவும் மகிழ்வடைகிறார் அம்மா," இப்படி ஓர் அம்மையை சுவாமி சிலாகித்துக் கூறி மகிழ்ந்திருந்தார்.

"கிருஷ்ண பரமாத்மா உங்களை நினைத்து உருகுகிறார் அம்மா," இப்படி ஓர் அம்மை யிடம் கூறி அங்கிருந்தோரிடம் ஒருவித பக்தி சிலிர்ப்பை சுவாமி ஏற்படுத்தினார்.

"இந்த அறிஞர்கள் யாவரும் என் தந்தையை உணர்ந்தவர்கள். அவர்கள் பெருங்கருணையோடு இந்தப் பிச்சைக்காரனைப் புகழ்ந்து பாடுகிறார்கள்," இப்படி சில அறிஞர்கள் குறித்து சுவாமி தழுதழுத்த குரலில் கூறினார்.

"இந்த நண்பனால் என் தந்தையின் காரியங்களை மட்டுமே செய்யமுடியும். இவரின் தெய்வீகப் பணியினால் என் தந்தை மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்," சுவாமியின் இப்படி ஓர் அன்புச் சொற்களினால் பக்தரின் கண்களில் ஆனந்த பாஷ்யம் வடிந்தது.

"நண்பா நீ அறிவாயா, இவர் எனது எழுதுகோல் என்று," பிரபல எழுத்தாளர் பாலகுமாரனைப் பற்றி சுவாமி பெருமையுடன் கூறியது.

"அம்மா, நீங்கள் கற்புக்கரசி அம்மா. கண்ணகி போன்றவர் அம்மா. என் தந்தை உங்களோடு எப்பொழுதும் இருக்கிறார் அம்மா," சுவாமி வாஞ்சையுடன் கூற, கைகூப்பி வணங்கித் தொழுத மாதை சுவாமி கைகூப்பி வணங்கி மகிழ்ந்தார்.


"பக்தரில் மாணிக்கம் நீங்கள்," என சுவாமி,

*தான் பிரசாதமாகக் கொடுத்த அழுகிய பழங்களை பக்தியோடு புசித்த அந்த உன்னத பக்தரைப் பார்த்து கூறியது கண்களில் இன்றும் நிழலாடுகிறது.*

*"உங்களைப் போன்ற உண்மையான சாதகர்களைக் காண்பது மிகவும் அரிது," என தான் அளித்த பெரும் பணத்தை மறுதலித்து, சுவாமியின் தெய்வீக நிலை தான் வேண்டும் எனக் கேட்ட அந்த அற்புத பக்தரைப் பார்த்து சுவாமி சொன்ன காட்சி இன்றும் என் கண் முன்னே தெரிகிறது.*

*இன்னும் எத்தனையோ பக்தகோடிகள் நம் கண்களில் தெரியாமல் இருந்தனர், இருக்கிறார்கள், இன்னும் மேன்மேலும் வரப்போகிறார்கள்.*

*புலன்கள்பால் கொண்ட அடிமைத்தனத்தை விலக்கி முக்திக்கு வழிகாட்டும் நமது சுவாமியின் பெருங்கருணையால் அடிமைகள் விடுதலை பெறட்டும். அடிமைகள் விடுதலை அடைய அனைவரும் சுவாமியைப் பிரார்த்திப்போம்.*



# பக்த சிரேஷ்டர்கள்

# 26

திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமாரின் தெய்வீக உன்னத நிலையை, அந்த பரிபூர்ண யோகித்துவத்தை ஆரம்பத்தில் அடையாளம் கண்ட சில பக்த சிரேஷ்டர்களின் பெயர்களை பக்தகோடிகளுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

1. திருவண்ணாமலை பண்டிட் டி.கே.சுந்தரேச ஐயர். ஆசிரியர் தொழில் செய்து ஓய்வு பெற்றவர். சிறந்த ரமண பக்தர். சுவாமியை யோகி என அறிந்து அவரை யோகி ராம்சுரத்குமார் என்று முதன்முதலில் 1959இல் அழைத்தவர். அவர் பரம ஞானி

என சுவாமியே அறிவித்தார். சுவாமியே அவருக்குப் பல்வேறு சேவைகள் செய்து மகிழ்ந்திருந்தார்.

2. சகோதரர் ஸ்ரீராம். சென்னை பிரம்மஞான சபையின் முன்னாள் தலைவர் இவர் யோகியின் பிரம்ம சொரூபத்தை 1960களின் ஆரம்பத்திலேயே அறிந்தவர். 1970களின் ஆரம்பத்தில் தன் நண்பரின் மகனான ட்ரூமன் காலர் வாடிங்டன் (Truman Caylor Wadlington) என்பவரை திருவண்ணாமலை அனுப்பி யோகியோடு சுமார் 7 மாத காலம் உடனிருந்து அவர் உணர்ந்ததை புத்தகமாக எழுத வைத்து அதை பிரம்மஞான சபையின் வாயிலாக யோகி ராம்சுரத்குமார், த காட் சைல்டு, திருவண்ணாமலை (Yogi Ramsuratkumar, The God child, Tiruvannamalai) என்ற புத்தகமாக பிரசுரித்தவர்.

3. சிவனணைந்த பெருமாள் சடையன். திருவண்ணாமலை பாத்திரக் கடை வீதியில் சொந்தக் கடை வைத்து சிறப்பாக வியாபாரம் செய்தவர். 1965லிருந்து, தன் தொழில் மறந்து, குடும்பம் மறந்து சுவாமிக்காகவே இறுதிவரை வாழ்ந்தவர்.

*தன்னுடையது எனச் சொல்லப்பட்ட அத்தனையும் இழந்து, சுவாமியுடன் மற்றொரு பிச்சைக்காரனாக வாழ்ந்தவர். அவர் சுவாமியின் நிழலாகவே இறுதிவரை வாழ்ந்தவர்.*

*4. திருக்கோவிலூரில் தேநீர் கடை நடத்தி வந்த மாற்றுத் திறனாளியான சீனிவாசன். ஏழ்மையில் வாழ்ந்தாலும், சுவாமிக்கும் ஆகாரம் படைத்து பக்தியுடன் வாழ்ந்த எளிமையான பெருமகனார். இவர் சுவாமியின் தெய்வீகத்தை 1965லிருந்தே உணர்ந்தவர். இரவெல்லாம் ராம நாமத்தை சுவாமியுடன் தெருவில் பாடி ஆடிக் கழித்தவர். தன் மொத்த குடும்பமும் சுவாமியின் திருவடி நிழலில் வாழ வைத்தவர்.*

*5. திருக்கோவிலூர் கோவிந்தசாமி பிள்ளை. பெரும் தனவந்தர். எனினும் இடுப்பில் நாலு முழ வேஷ்டியும், தோளில் துண்டும், இதயம் முழுவதும் இறைவனை நிரப்பியும் எளிமையாக வாழ்ந்த காந்தீயவாதி. நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர். 1965இல் இவரும் சுவாமியின் மேன்மை அறிந்து அவருக்கு சேவை செய்தவர்.*

சுவாமி எப்போது திருக்கோவிலூர் வந்தாலும் அவருக்குத் தங்குவதற்கு அறையும், உணவும் படைத்து மகிழ்ந்தவர். பன்மொழி வித்தகர். சுவாமியுடன் பிரம்ம ஞானத்தைப் பரிமாறிக் கொண்டவர். பிற்காலத்தில் பெரும் பணத்தை சுவாமி அவருக்கு அளிக்க முற்பட்டபோது, தனக்கு தெய்வ சாட்சாத்காரம்தான் வேண்டுமென்றும், நிரந்தரமில்லாத வேறு எந்த வஸ்தும் தேவையில்லை எனக் கூறிய மஹானுபாவர்.

6. திருவண்ணாமலையில் உடுப்பி பிருந்தாவன் என்ற பெரிய உணவு விடுதி நடத்தி வந்தவர் கோவிந்த பட். 1965க்குப் பின்னர் சுவாமி எப்போதெல்லாம் அவருடைய உணவு விடுதிக்கு வருவாரோ அப்போதெல்லாம் அவர் பசி தீர்த்து அனுப்ப வேண்டுமென தன் மருமான் ராமச்சந்திர உபாத்யாயாவிற்கு உத்தரவு போட்டவர். சுவாமியின் பிரம்ம நிலையை உணர்ந்தவர். பிற்காலத்தில் ராமச்சந்திர உபாத்யாயா சுவாமியின் பிரியமான பக்தரானார்.

7. இதனிடையே வெளிநாடுகளைச் சேர்ந்த பல பக்தர்கள் சுவாமியின் திருவடி பணிந்து

உன்னத பிரம்ம நிலை அடைந்தார்கள். அவர்களின் அடையாளம் இதுவரை எவராலும் அறிய முடியவில்லை. சில புகைப்படங்கள் மட்டுமே சாட்சிகளாக உள்ளன. இம்மகான்கள் யாவருக்கும் எனது நமஸ்காரங்கள். இவர்கள் யாவரும் 1975ஆம் வருடத்திற்கு முன்பே சுவாமி யிடம் வந்தவர்கள்.

இதுபோக, திருவண்ணாமலை நகரிலும், நகரைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், கிரிவலப் பாதையில் வசித்து வந்த ஏழைகளும் சுவாமியின் தெய்வீகத்தை உணர்ந்து சுவாமிக்கு பல்வேறு வகையில் சேவை புரிந்தனர்.1975க்கு பின் வந்த பக்தகோடிகளை இப்போதுள்ள பக்தர்கள் ஓரளவு அறிவார்கள் என நம்புகிறேன்.



# பெருமை, அது சுவாமியின் அண்மை தந்தது

# 27

**அ**ந்தச் சிறுவன் சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் பணிக்குச் சேரும்போது அவனுக்குச் சுமார் பதினான்கு வயதிருக்கும். அச்சிறுவனும் சுவாமியின் நண்பர் மூலம் சுவாமியிடம் அனுப்பப்பட்டவன். அச்சிறுவனின் மொத்த குடும்பமும் சுவாமியின் மீது பக்தி செலுத்துபவர்கள்.

அச்சிறுவன் சுவாமியின் பணியில் மனப்பூர்வ மாக ஈடுபட்டு வெகு விரைவில் சுவாமியின்

நம்பிக்கைக்குப் பாத்திரமானான். சுவாமியின் சந்நிதித் தெரு வீட்டில் சுவாமிக்கு உதவியாளராகப் பணிபுரிந்தான்.

காலை பத்து மணிக்கு சுவாமி வீட்டினுள் இருந்து வெளி தாழ்வாரத்திற்கு பக்தர்களுக்கு தரிசனம் அளிக்க வருமுன், அச்சிறுவன் சுவாமி அமர வேண்டிய பாயை விரித்து வைத்து, அவருடைய மற்ற பொருட்களையும் சுவாமி இலகுவாகக் கையாளும் வகையில் பாயின் பக்கத்தில் வைத்திருப்பான்.

பின்னர் இரும்புக் கதவிற்கு வெளியே சுவாமியின் நெடுநாளைய பக்தர்கள், சுவாமி விரும்பிப் பார்க்க நினைக்கும் பக்தர்கள் எவரேனும் வந்திருந்தால் அவர்களை ஞாபகம் வைத்துக் கொள்வான்.

சுவாமி வீட்டினுள் இருந்து வெளியே வந்து தன் இருக்கையில் அமர்ந்தபின், அச்சிறுவன் பக்தர்கள் வந்திருக்கும் செய்தியை அறிவிப்பான். அச்சிறுவனுக்கு அநேகமாக சுவாமியின் பழங்கால பக்தர்கள் அனைவரையும் தெரிந்திருந்தது.

சுவாமியின் உத்தரவு ப்படி, சுவாமியின் நெருக்கமான பக்தர்களை உள்ளே


அழைப்பான். அவர்கள் உள்ளே அமர்ந்து பின்னர் மற்ற பக்தர்களை ஒவ்வொருவராக சுவாமியின் தரிசனத்திற்கு அனுப்புவான்.

சுவாமி சொல்லாத பக்தர்களை, அவர்கள் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவரா யினும் அல்லது வேறு எவராக இருப்பினும், அவர்கள் எவ்வளவு கெஞ்சினாலும் அவன் அவர்களை உள்ளே அனுமதிக்க மாட்டான்.

சுவாமி அவன் கல்லூரி படிப்பு படிக்க வேண்டுமென விரும்பினார். எந்தக் கல்லூரியிலும் சேராமல் தனியாக கல்லூரி ஆசிரியரிடம் கல்வி பயின்று பட்டப் படிப்பு படித்து முடித்தான்.

சுவாமி 1993இன் இறுதியில் சுதாமா இல்லம் சென்றுவிட்டார். சந்நிதித் தெரு வீட்டின் முழுப் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தார். சுவாமி சந்நிதித் தெரு வீட்டில் இருந்தபோது வீடு எவ்விதம் இருந்ததோ, அதே போன்றே அவன் சுவாமியின் வீட்டைப் பராமரித்து வைத்திருந்தான்.

சுவாமி ஆஸ்ரமம் செல்ல ஆரம்பித்தார். அந்தச் சிறுவனை தினமும் ஆசிரமம் வந்து செல்ல உத்திரவிட்டார். அச்சமயம் இருந்த


YOGI RAMSURATKUMAR
ASHRAM



*ஆஸ்ரம நிர்வாகியிடம் சுவாமி, அந்தச் சிறுவனுக்கு ஆஸ்ரம கணக்கு வழக்குகளில் பயிற்சி கொடுக்கச் சொன்னார். சிறுவன் தயங்கினான்.*

*"சுவாமி, எனக்கு கணக்கு பார்க்கத் தெரியாதே" சிறுவன் தயங்கித் தயங்கிக் கூறினான்.*

*சுவாமி அவன் கரத்தைப் பற்றினார். அவனின் சுண்டு விரலைப் பிடித்து,*

*"இது எத்தனா?" சுவாமி வினவினார்.*

"ஒன்று சுவாமி." அவன் பதிலளித்தான். சுவாமி அவனின் பத்து விரல்களையும் பிடித்துக் கேட்க அவன் எண்களைச் சரியாகச் சொன்னான்.

"சரியாப் போச்சு. உங்களுக்கு கணக்கு வந்துவிட்டது. இனி தைரியமாக வேலை பார்க்கலாம்."

சுவாமியின் சொல் அவனுக்கு நம்பிக்கை ஊட்டியது. அவனுக்கு ஆஸ்ரம நிர்வாகி சிறுசிறு அன்றாடக் கணக்குக் குறிப்புகள் கொடுத்து எழுத வைத்தார்.

சுவாமியின் தேக ஆரோக்கியம் குன்றி மஹா சமாதி அடைந்தார்.

அச்சிறுவனை அதன் பின்னர் யாரும் கண்டுகொள்ளவில்லை. அவன் சந்நிதித் தெரு வீட்டில் இருப்பதையும் ஆஸ்ரம நிர்வாகம் விரும்பவில்லை. அவனை வெளியேற்ற பல முயற்சிகள் நடந்தன. முடிவில் விரக்தியில் அச்சிறுவனே ஆஸ்ரமத்திலிருந்தும், சந்நிதித் தெரு வீட்டிலிருந்தும் வெளியேறினான்.


சுமார் பதினான்கு ஆண்டுகள் சுவாமியுடன் கழித்து வெளியேறிய அவனுக்கு உலகத்தின் கோரமுகம் அறிமுகமாகியது. சுவாமியின்

அண்மை கொடுத்த பெருமை சுவாமிக்கானதே என உணர்ந்தான்.

கடும் சூழ்நிலைகளில் அவன் தள்ளாடினான். முடிவில் சுவாமியின் அருளால் அவன் வாழ்வின் பாடங்களைக் கற்றுக் கொண்டான். தன் மனைவி மக்களோடு சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

ஓய்வாகத் தனித்துப் பேசினால் சுவாமி குறித்து ஆயிரமாயிரம் செய்திகள் மடை திறந்த வெள்ளம்போல் பிரவாகமாக அவனிடமிருந்து பீறிட்டு வரும். அப்பொழுது அவன் சொரூபமே சுவாமியின் சாயலில் தோன்றும்.

அச்சிறுவனின் பெயர் சசீந்திர கணேசமூர்த்தி. அவனை அனைவரும் ‘சசி’ என்றே அழைப்பார்கள்.



# சுவாமி அனைவருக்குமானவர்

# 28

1965களில் ஒரு நாள், "நண்பா எனக்கு ஒரு தேநீர் வாங்கித் தருவீர்களா?"

"இதோ சுவாமி." அடுத்த சில நிமிடங்களில் தேநீர் வந்தது. பின்னர் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அந்த நண்பர் தன் வீட்டிலிருந்து தனக்காக அனுப்பப்பட்ட உணவை சுவாமியுடன் பகிர்ந்து கொண்டார். அவர் பெயர் சிவனணைந்த பெருமாள் சடையன்.

திருக்கோவிலூரில் தேநீர் கடை நடத்தி வந்த ஏழை மாற்றுத் திறனாளி சீனிவாசன், சுவாமி தபோவனத்தில் சஞ்சாரம் செய்த காலத்தில் ஒருபோதும் சுவாமியை பசியால் வாட அனுமதித்ததில்லை.

கூழோ, கஞ்சியோ, நீராகரமோ, தேநீரோ, வடையோ, எது தயாராக உள்ளதோ அதை சுவாமிக்கு மகிழ்வோடு படைத்து வந்தார்.

தென்பெண்ணை ஆற்றின் மறுகரையில், ஊரில் பெரும் தனவந்தரான கோவிந்தசாமி பிள்ளையின் விருந்தோம்பலில் சுவாமியின் பசி தீர்க்கப்பட்டது.

அதே 1960களில் திருவண்ணாமலையில் உணவகம் நடத்தி வந்த கோவிந்த பட், சுவாமி தன் உணவகத்திற்கு வரும் சமயமெல்லாம் சுவாமியின் பசியைத் தீர்த்தார்.

அதே காலத்தில், அண்ணாமலையார் கோவிலின் நந்தவனத்தில் பணியாற்றிய பரம ஏழை சண்முகம், சுவாமியின் பசியை பன்முறை தீர்த்து வைத்தார்.

அடிஅண்ணாமலை ஊரில் உள்ள தேநீர் கடைகள், அங்கு வாழ்ந்த காந்தீயவாதி பக்தர் சுவாமியின் பசிக்கு எளிய விருந்தை அன்போடு படைத்தனர்.

*1970களில் பல வெளிநாட்டு பக்தர்களும், சாதகர்களும் சுவாமியை பசி இல்லாமல் கவனித்துக் கொண்டனர். உள்நாட்டு பக்தர்களும் சுவாமியின் தேவைகளைப் பூர்த்தி செய்தனர்.*

*1975இல் ஒரு நாள் பெருமாள் ஆங்கில தினசரிகளான தி ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய இரண்டு தினசரி பத்திரிகைகளை சுவாமிக்கு கொடுத்து வந்த கடைக்காரரர் பாக்கி பணம் 100 ரூபாய்க்காக மிகவும் நெருக்கடி தருவதாகக் கூறினார். அச்சமயம் மதுரை டாக்டர் ராஜசேகர் தன் குடும்பத்தோடு சுவாமியை தரிசனம் செய்ய வந்திருந்தார்.*

*"நண்பா, இந்தப் பிச்சைக்காரருக்கு 100 ரூபாய் பணம் தருவீர்களா?" சுவாமி வினவினார்.*

*டாக்டர் ராஜசேகர் உடனடியாக தனது சட்டைப் பையில் இருந்து 100 ரூபாயை எடுத்துக் கொடுத்தார். இவ்வாறு பத்திரிகைக் கடன் தீர்க்கப்பட்டது.*

*மற்றொரு பெங்களூர் நண்பர் ஜனார்த்தனன் தான் சுவாமியைத் தரிசித்த நாள் முதல் அதாவது 1975லிருந்து சுவாமிக்கு, சுவாமி*


தன் தேகத்தை விடும் வரை ஒரு குறிப்பிட்ட தொகையை மாதம்தோறும் தவறாது அனுப்பி வைத்தார்.

1976இல் சுவாமியின் சிரமத்தைப் போக்கு வதற்காக தூத்துக்குடி ராஜமாணிக்கனார், சிவகாசி ராஜதுரை, திருவில்லிபுத்தூர் பெருமாளப்பன், சிவகாசி ஞானகிரி கணேசன் ஆகியோர் இணைந்து பெரும் தொகை கொடுத்து சந்நிதித் தெரு வீட்டை சுவாமிக்காக வாங்கினர்.

இது போன்று பல பக்தர்கள் சுவாமிக்குக் காணிக்கையாக பணமாகவும், பழமாகவும், உணவாகவும், புஷ்பமாகவும் பக்தி சிரத்தையுடன் சுவாமியின் திருவடியில் சமர்ப்பித்தனர்.

1977இல் ஒரு சிறந்த, வயதான பக்தருக்கு தன் மகனின் ஏழ்மை நிலை குறித்த கவலையை அகற்றுவதற்காக, தனக்கு காணிக்கையாக வந்த பணம் ரூபாய் ஐந்து லட்சத்தை அந்த பக்தரின் மகன் பெயரில் வங்கியில் டெபாசிட் செய்தார்.

1970களின் இறுதியில் சுவாமிக்கு காணிக்கை யாக பணம் குவிந்தவாறு இருந்தது.



*வந்த பணத்தை சுவாமி வறியவரின் அத்தியாவசிய தேவைக்காகவும், சாதகர்களின் கவலைகளைத் தீர்ப்பதற்காகவும் செலவிட்டார்.*

*1993இல் ஆஸ்ரமத்திற்குத் தேவையான நிலத்தை பணம் கொடுத்து பதிவு செய்ய பெருந்தொகை தேவைப்பட்டது. சுவாமியின் விருப்பப்படி இசையமைப்பாளர் இளைய ராஜா தேவைப்பட்ட முழுப் பணத்தையும் கொடுத்தார்.*

*1994இல் ஒரு பக்தையின் ஏழ்மையான, நோய்வாய்ப்பட்ட தாயாருக்கும் கணிசமான தொகையை சுவாமி கொடுத்து உதவினார்.*

ஆசிரமக் கட்டட வேலை நடந்த சமயம் ஒரு நாள், ஆசிரம நிர்வாகி சுவாமியிடம், "சுவாமி நாளையிலிருந்து ஆசிரம கட்டட வேலையை, பணம் இல்லாததால் நிறுத்த வேண்டியுள்ளது," எனக் கூறினார்.


அச்சமயம் சிவகாசி ராஜேஷ் சுவாமியின் அருகில் இருந்தார்.

"ராஜேஷ் இந்தப் பிச்சைக்காரனுக்குப் பணம் வேண்டும். கொடுப்பீர்களா?" சுவாமி வினவினார்.

ராஜேஷ் உடனடியாகச் சம்மதித்து நிர்வாகி கேட்ட பெருந் தொகையை சுவாமியிடம் வழங்கினார்.

"உங்களுக்குத் தெரியுமா? இந்த சுவாமி ஒரு வேளை நல்ல ஆகாரத்திற்காக திருவண்ணா மலை வீதிகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். அவருக்கு நல்ல உணவும், இருப்பிடமும், ஆடைகளும் நான்தான் கொடுத்து இவரை ஆதரித்தேன்."

1986இல் முதன்முதலில் சுவாமியைத் தரிசித்த ஒரு பக்தையினால் 2000மாவது வருடத்தில் ஒரு கனவானான பக்தரிடம் சொல்லப்பட்ட வாசகம் இது.



# வெண்பொங்கல்

## 29

2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு நாள் சுவாமி யோகி ராம்சுரத்குமார் காலைச் சிற்றுண்டிக்காக என்னை அழைத்திருந்தார். அச்சமயம் சுவாமியின் உடல்நிலை சீராக இல்லை. அவருக்கு புற்றுநோய் இருப்பதாக உறுதி செய்யப்பட்ட நேரம். சுவாமிக்கு நீரழிவு நோயும் இருப்பதாக உறுதி செய்யப்பட்ட நேரம்.

சுவாமியின் எதிரில் அன்றைய நிர்வாகிகள் மற்றும் சுவாமியை உடனிருந்து கவனித்து

வந்தவர்களும் இருந்தனர். சிற்றுண்டி பறிமாறப்பட்டது.

முதலில் நெய் ஒழுகும் கேசரி சுவாமிக்கு ஊட்டப்பட்டது. ஒரு வாய் வாங்கியதும், சுவாமி மேலும் உண்ண மறுத்துவிட்டார். பின் கேசரி அனைவருக்கும் பறிமாறப்பட்டது. அதன்பின் வரிசையாக இட்லி, வடை, வெண்பொங்கல், தோசை, பூரி, இன்னும் பலவகை உணவுப் பொருள்கள் சுவாமிக்கும் மற்றோருக்கும் பறிமாறப்பட்டது.

சுவாமி சிறிது வெண்பொங்கலை மட்டுமே சாப்பிட்டார். உணவு வகைகளைப் பறிமாறிய அந்த ஸ்திரீயை சுவாமி அருகில் அழைத்தார்.

"இங்கே நாம் சாப்பிடுவதைத் தான் அங்கே உணவுக் கூடத்தில் மற்ற நண்பர்களும் சாப்பிடுகிறார்களா?"

சுவாமி அன்றைய பணியாளரும், இன்றைய நிர்வாகியுமான ஸ்திரீயிடம் வினவினார்.

"ஆம் சுவாமி, இதே உணவுதான் அங்கேயும் பக்தர்களுக்குப் பறிமாறப்படுகிறது."

ஸ்திரீ பதற்றத்துடன் பதிலளித்தார்.


அன்று பக்தர்களுக்கு உணவுக்கூடத்தில்

பறிமாறப்பட்டது வெறும் வெண்பொங்கல் மட்டுமே.

சுவாமி சந்நிதித் தெரு வீட்டில் இருக்கும்போது சில பக்தர்களுடன், அவர்களின் ஜாதி, மத மற்றும் பொருளாதார பேதமின்றி ஒரே இலையிலிருந்து ஆகாரத்தை சுவாமி ரசித்துப் புசித்தார்.

இன்று ஆசிரமத்தில் பல உணவுக்கூடங்கள். தகுதிவாரியாக உணவுகள் தயார் செய்து பக்தர்களை மதிப்பீடு செய்து, டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டு யார் எந்த உணவுக்கூடத்தில் சாப்பிட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சம்பிரதாயங்கள் என்று இவை வர்ணிக்கப் படுகின்றன.



# சுவாமியின் சிலையும் சமாதியும்

## 30

2001ஆம் ஆண்டு, பிப்ரவரி 22ஆம் நாள் சுவாமி யோகி ராம்சுரத்குமாரை சமாதியில் பிரதிஷ்டை செய்த மறுநாள் காலையில், சுவாமியின் சமாதியிலிருந்து, சுவாமியின் திருவுருவச் சிலை வரை அகலமான நேர் ஒழுங்குக் கோட்டில் பனி நீர்த்திவலைகள் இணைத்த நாள்.

அதிசயமான அந்தச் சம்பவம் அதன் பிறகு தோன்றவே இல்லை. சுவாமி இதிலிருந்து

*நமக்கு என்ன சொல்ல விரும்பினார் என பலரும் பலவாறு கணித்தனர்.*

*அதில் ஒரு சாரார், சுவாமி தன் சரீரத்தில் இருக்கும்போது எவ்வாறு பக்தர்களை சுவாமியின் திருவுருவச் சிலையை வலம்வந்து பாதம் தொட்டு நமஸ்கரித்து பின் தன்னிடம் வரவேண்டும் என நடைமுறைப்படுத்தினாரோ, அதே போல் சுவாமியின் சிலையை வலம்வந்து பின் சமாதியையும் வலம் வந்து புஷ்பங்களால் அர்ச்சித்து சுவாமியின் சமாதியை தொட்டு வணங்க வேண்டும் என சொல்கிறாரோ என நினைத்தனர்.*

*ஆனால் அது இன்றுவரை பல மத மற்றும் சமூகக் காரணங்களைக் காட்டி நடைமுறைப்படுத்தப்படவில்லை.*

*நம் சுவாமியின் குருபீடமான ஆனந்தாஸ்ரம சுவாமி சச்சிதானந்தரின் வழிகாட்டுதலையும், அறிவுரையையும் மீறி பல சம்பிரதாயங்களும், சடங்குகளும் சமாதியில் புகுத்தப்பட்டன.*

*2000ஆம் ஆண்டு சுவாமி மருத்துவமனை யிலிருந்து ஆஸ்ரமம் திரும்பிய பின், ஆஸ்ரமத்தைச் சுற்றிப் பார்த்தபோது,*



*"இந்தப் பிச்சைக்காரன் இல்லை என நினைத்து ஆஸ்ரமத்தையே மாற்றிவிட்டீர்களே,"*

எனக் கோபத்தோடு குமுறியபோது, மறுதலித்த நிர்வாகத்தினர், சுவாமியின் சமாதிக்குப் பின் அனைத்து வகையான சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் புகுத்தினர்.

இந்த நடைமுறை ஒரு சாராருக்குப் பயத்தையும், மற்ற தரப்பினர்க்கு வருத்தத்தையும் ஏற்படுத்தியது. வருங்காலத்தில் சுவாமியின் திருவுளம் எவ்வாறு இருக்குமோ, அவரே அறிவார்.



# மானவ தர்மம்

# 31

'ஒரு காரியம் செய்யும் சமயத்தில் குழப்பமோ அன்றி தயக்கமோ ஏற்பட்டால், அக்காரியத்தை என் தந்தையின் திருவடியில் மானஸீகமாகச் சமர்ப்பித்துவிட்டு, சற்று காலம் அமைதியாக இருந்தால், என் தந்தை அக்காரியம் மானவ தர்மத்திற்கு உகந்ததாக இருக்கும்பட்சத்தில் அக்காரியத்தைச் செய்யும்படியான தகுந்த சூழ்நிலைகளை தகுந்த நேரத்தில் ஏற்படுத்தித் தருவார்.

அக்காரியம் மானவ தர்மத்திற்குப் புறம்பாக இருக்கும்பட்சத்தில் அக்காரியம் பற்றிய

*சிந்தனையையே மறக்கடித்து, நம்மை நல்வழிப்படுத்துவார். இங்கு காரியங்களும், காரியங்கள் குறித்த சிந்தனையும் என் தந்தையின் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்டு சரணாகதி அடைவதைப் பொறுத்தே, பக்தர்களுக்கு, காரிய செயல்பாட்டின் சித்தி சம்பவிக்கிறது.*

*மேலும் ஒரு காரியத்தை செயல்படுத்த எத்தனிக்கும் தருணத்தில் பயமோ அன்றி பரிதவிப்போ ஏற்பட்டால், என் தந்தையைச் சரணடையும் பட்சத்தில் அக்காரியம் மானவ க்ஷேமத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக இருந்தால், அக்காரியத்தைச் செய்யும் சூழ்நிலையை என் தந்தை முற்றிலும் தவிர்த்து விடுவார்.*

*என் தந்தையைச் சரணாகதி அடைபவர்கள் தங்கள் லௌகீக வாழ்வில் கூட எந்தத் தவறும் செய்ய இயலாது. அவர்கள் மானுட க்ஷேமத்திற்கே என்றென்றும் பணியாற்று வார்கள்.'*



# தந்தையின் பிள்ளை

# 32

"என் தந்தை இந்தப் பிச்சைக்காரனை என்ன பேசச் சொல்கிறாரோ, அதை மட்டுமே இந்தப் பிச்சைக்காரன் பேசுவான். என் தந்தை மௌனிக்கச் சொன்னால் மௌனமாக இருப்பான். சிரிக்கச் சொன்னால் சிரிப்பான். அழச் சொன்னால் அழுவான்.

இந்தப் பிச்சைக்காரன் என்ன செய்ய வேண்டும், எங்கே செல்ல வேண்டும், என்ன பேச வேண்டும், யாரிடம் பேச வேண்டும் என அனைத்தையும் நிர்ண யிப்பது என் தந்தையே. என் தந்தையின்

பிள்ளை நான். அழுக்கான பிள்ளையாக நான் இருக்கலாம். இருப்பினும் நான் என் தந்தையின் பிள்ளையே.

என் தந்தை போல் என்னை நேசிப்பவரும் எவருமில்லை. என் தந்தை போல் என்னை இம்சிப்பவரும் எவரும் இல்லை. என் தந்தைஎன் மீது கொண்ட அபரிதமான அன்பினால் என்னைக் கொன்றுவிட்டார். இப்போது இருப்பது இந்தப் பிச்சைக்காரன் அல்ல. என் தந்தையே இங்கிருக்கிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நடைபெறும் அனைத்துச் செயல்களையும் என் தந்தையே செய்கிறார். எனவே இங்கு நடக்கும் அனைத்து செயல்களும் மிகச் சரியாகவே நடக்கின்றன. ஏனெனில் என் தந்தை ஒருபோதும் பிழை செய்வதில்லை.

இங்கு என் தந்தையைத் தவிர்த்து வேறு என்ன இருக்கிறது? இந்தப் பிச்சைக்காரன் என் தந்தையைத் தவிர்த்து வேறு எதையும் காணமுடியவில்லை. இது கலியுகம் இல்லை. இது கடவுள் யுகம். எங்கெங்கும் என் தந்தையே பரிபூரணமாக நிறைந்திருக்கிறார். நேற்று, இன்று, நாளை, என்றென்றும் என் தந்தையே இருக்கிறார். என் தந்தையைத்



தவிர்த்து வேறெதுவும் இல்லை, வேறு யாரும் இல்லை. என் தந்தையே எல்லாமாகி இருக்கிறார்.

என் தந்தையை நினைத்திரு நண்பா, அதுவே வாழ்வாகும். என் தந்தையை மறந்துவிட்டால் அதுவே சாவாகும். என் தந்தையை நினைத்து வாழ்ந்திரு நண்பா."

சரணாகதியின் உச்சத்தில் இருந்து பிரவாகமாக சுவாமி யோகி ராம்சுரத்குமார் உதிர்த்த தெய்வீக முத்துக்கள் இவை. எடுத்துக் கோத்து மனக் கஜானாவில் நிரப்பிக் கொள்ளுங்கள் நண்பர்களே.



# வாழ்வின் நோக்கம்

## 33

**சு**வாமி யோகி ராம்சுரத்குமாரின் தெய்வீக நிலையை வார்த்தைகளில் கொண்டு வருவது எவருக்கும் சாத்தியமற்ற ஒன்று. அவரின் தெய்வீகத்தில் அவர் அருளால் கரைக்கப்பட்டு நமது சொரூபம் விடுத்து அவர் சொரூப திருவடித் துகளாக மாறுவதே நம் வாழ்வின் முடிவான நோக்கமாகும்.

இந்த பெரிய நோக்கத்தை அடையும் சாதனமே நமது இவ்வுலகியல் வாழ்வாகும். இந்த உலகியல் வாழ்வின் தர்மங்களைத் தன்

*விழியாலும், மொழியாலும், ஸ்பரிசத்தாலும், உச்சிஷ்ட பிரசாதத்தாலும் போதித்து, சத் வாழ்வை வாழவைத்து, தகுந்த நேரத்தில் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளும் சுவாமியின் பேரருள் கிடைக்கப் பெற்றோர் பாக்கியவான்கள்.*

*வாழ்வின் ஏற்ற இறக்கம், மாற்றமெனும் மாயையில் சிக்கி நமையறியாது வாழ்க்கைச் சுழலில் சிக்கிப் பரிதவிப்போருக்கு, அதே வாழ்வின் மூலமே ஞானதீபம் ஏற்றி வாழ்வின் போக்கை மாற்றித் தன்வயப்படுத்தும் சுவாமியின் லீலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.*

*இந்த வாழ்வின் வேதனையான போக்கை சுவாமியின் நாம ஸ்மரணத்திலும், ரூப தியானத்திலும் லகுவாக சுவாமியின் அருளால் கடந்துவிடலாம். வாருங்கள் நண்பர்களே. வாழ்ந்து சுவாமியின் திருவடியில் கரைந்து விடுவோம்.*



# ஆன்மிகம் மாவீரர்களுக்கே

## 34

1947இல் ஆரம்பித்த சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் தெய்வத்தை நோக்கிய பயணம், சுமார் *18* ஆண்டுகள் கழித்து அந்தப் பரப்பிரம்மத்தில் கரைந்து முழுமையடைந்தது. இந்த நீண்ட *18* ஆண்டுகள் பயணத்தில் அவர் அடைந்த பரிபூர்ண அனுபவங்களைச் சொல்லில் வடிப்பது சாத்தியமற்ற செயலாகும்.அவரின் பயணத்திற்கு ஆதாரமாகி அந்த அற்புத

பயணத்தில் ஊக்கமளித்து உறுதுணையாகி நின்றவர்கள் அன்றைய ஆன்மிகச் சிங்கங்கள் ரமண மஹரிஷி, அரவிந்தர், பப்பா ராமதாஸ் மற்றும் ஜே.கிருஷ்ணமூர்த்தி போன்றோர் ஆவர்.

இவர்கள் அளித்த ஆன்மிகப் பெருவலியும், திக்கற்ற, நாளை என்ற ஒன்று இல்லாத சூன்யமும், கூரையும், தளமும் இல்லாத இயற்கையான பூமியின் மேல் வானின் கீழ் அமைந்த இருப்பிடங்களும், பசியும், தாகமும், குளிரும், வெப்பமும் தாக்கிய சோர்ந்த உடலும் கொண்டு வாழ்வின் ஆன்ம ஜோதியில் கரைய வைத்தவர்கள் அந்தப் புண்ய பரம்பொருளின் ரூபங்கள்.

அவர்களை என்றும் நினைவுகூர்ந்த எம்பெருமான் யோகி ராம்சுரத்குமாரை எவர் தன்மயமாக்கிக் கொள்கிறார்களோ அவர்கள் பாக்கியவான்கள்.

இந்த இயற்கையான கரைதல் பவித்திரமானது. லோக க்ஷேமத்திற்கு உகந்தது. இந்த நடைமுறையில் வந்த பரமார்த்த காரியங்கள் கொடுக்கல், வாங்கலில் அடங்காது.

ஆண்டவனை நோக்கிய பயணத்தில் தன்னை இழப்பது தான் பிரதானம். தன்னை, ‘நான்’

என்ற உணர்வை விடுத்தால், சாசுவதமாக என்றும் நம்மில் இருக்கும் அந்தப் பரம்பொருள் நம்மை ஆட்கொள்ளும். அதற்கு ஞானிகளின் வழிகாட்டுதல் நம்மை வழி நடத்தும்.

பரம்பொருளான குரு, நம்மை வாழ்வெனும் மாயையில் இருந்து விடுவிக்க வந்தவர். நம்மை அந்த மாயையில் அடிமைப்படுத்த அல்ல. அந்த அடிமைத்தனத்தில் சந்தோஷம் அடைபவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

'உனது குரு சிவனாகவோ, விஷ்ணுவாகவோ, ஏன் பிரம்மனாகவோ இருந்தாலும், நீ உன்னுள் இருக்கும் ஆத்மனில் நிலை பெறவில்லையெனில், அவர்களால் உனக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.' இது அஷ்டவக்கிர மாமுனி தனது 'அஷ்டவக்கிர கீதை'யில் அருளியது.

சாதனாவால் அடைய வேண்டிய பரமனை பிச்சையால் அடைய நினைப்பது பரிதாபத்துக்குரியது.

ஆன்மிகம் பழைய கஞ்சியை பிச்சை எடுத்து, உண்டு பிழைப்பதுபோல் இல்லை. ஆன்மிகம் தன்னை இழக்கத் துணிந்த மாவீரர்களுக்கே சாத்தியமாகும்.




# சுவாமி நிறைந்து இருக்கிறார்

# 35

மஹா மாயை புத்தியைப் பேதலிக்க வைத்து சதிராட்டம் ஆடும்போது, மனம் கலங்கித்தான் போகிறது.

கடந்த இரண்டாண்டு காலமாக மனித குலத்தின் இயல்பான வாழ்வைப் புரட்டிப் போட்டபின், மனித சமுதாயம், தான் எங்கிருக்கிறோம், என்ன செய்யப் போகிறோம் எனக் கலங்கிப் பரிதவித்துப் பதறி பலஹீனமாகப் போராடி சலிப்படைந்து



போயிருக்கிறது. வாய்ப்பு உள்ளவர்களும், வாய்ப்பற்ற வர்க்கமும், தலைவர்களும், தொண்டர்களும், தனித்துவமாக இருப்பதாகக் கருதுபவர்களும், உள்ளூர பதறித்தான் போயுள்ளார்கள்.

ஜீவன்கள் தங்களின் சாசுவத யதார்த்த நிலையை மஹா மாயை மறைக்கும் போது பயமும், துன்பமும் ஏற்படுகிறது. விஷயங்கள் தங்கள் கட்டுப்பாட்டை விட்டு சென்றுவிட்டதாகக் கருதி ஜீவன்கள் கோபமடைகின்றன. சிதிலமடைந்து கொண்டிருக்கும் வாழ்வைச் சீர் செய்ய என்ன செய்யப் போகிறோம்?

கையில் காசில்லை. வங்கிக் கணக்கும் இல்லை. வயோதிகம் வந்துவிட்டது. கொடும் நோயும் தாக்கிவிட்டது. நடமாட்டம் ஸ்தம்பித்து விட்டது. அன்பர்கள் வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்ய யத்தனிக்கும்போது, "இந்தப் பிச்சைக்காரனுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை என் தந்தை அறிவார்.

அன்பர்களே புரிந்து கொள்ளுங்களேன்," சுவாமி யோகி ராம்சுரத்குமார் தனது இறுதி நாட்களில் அன்பர்களிடம் கூறினார்.

நோய் முற்றியது. சுவாமியின் எண்ணத்திற்கு மாறாக சுவாமிக்கு வைத்தியம் செய்யப்

பட்டது. நோயிலிருந்து சுவாமி விடுபட்டார் எனக் கூறப்பட்டது. எனினும் அடுத்த சில மாதங்களில் முக்கிய உடலுறுப்புகள் தேய்மானம் அடைந்து செயல்பாடுகளை நிறுத்தியது. சுவாமியின் சொரூபம் பஞ்சபூதத்தில் கரைந்தது.

ஆனால் சுவாமி இன்றும் இருக்கிறார். எங்கும் இருக்கிறார். அமைதியிலும் இருக்கிறார். ஆர்ப்பாட்டத்திலும் இருக்கிறார். அன்பிலும் இருக்கிறார், சச்சரவுகளிலும் இருக்கிறார். உறவிலும் இருக்கிறார், பகைமையிலும் இருக்கிறார். நோயாக இருக்கிறார், நோய் தீர்க்கும் மருத்துவராக இருக்கிறார். பயத்திலும் இருக்கிறார், பயமற்ற பக்தியிலும் இருக்கிறார்.

சுவாமி இருக்கிறார். என்றென்றும் இருக்கிறார். நம் வாழ்வை நிர்ணயிக்க அவர் இருக்கும்போது, நாம் ஏன் கவலையுற்று நலியவேண்டும்? அவரை நினைத்து வாழ்ந்து விடுவோம். மாயை விலக சுவாமியை நினைப்போமே. அவர் அழைத்தால் சென்று விடுவோம். அதுவரை நமக்கு அவர் அளித்த வாழ்வின் கடமைகளைக் கருத்தாகச் செய்துவிடுவோமே. அச்சமற்று வாழ்ந்து விடுவோமே.